# ஜாமக்காரன்
# JAMAKKARAN

VOLUME - 2 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 6

JUNE 2018 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=


*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பானவர்களே !

தெய்வ கிருபை உங்கள்மேல் பெருகுவதாக. ஜீன் மாதம் இந்திய மக்களுக்கு கடினமான மாதம். பிள்ளைகளை பள்ளியிலும், கல்லூரியிலும் சேர்க்கும் மாதம், மேலும் பரீட்சையில் வெற்றியடைந்தவர்கள் வேலை தேடும் மாதம் ஆகும். கர்த்தர்தாமே உங்கள் யாவரின் தேவைகளையும் பூர்த்தி செய்து ஆசீர்வதிப்பாராக.

நம் ஜாமக்காரன் வாசகர் குடும்பத்தின் பிள்ளைகள் யாவரும் 11,12விலும், 10 பரீட்சையிலும், நீட் தேர்விலும் தேர்ச்சி பெற்ற விவரம் அறிந்து தேவனைத்துதிக்கிறேன்.

## குவைத் மற்றும் ஐரோப்பிய தேசங்களின் ஊழியங்கள்:

கடந்த ஏப்ரல்,மே மாதங்களில் நடந்த ஐரோப்பிய ஊழியங்கள் பெருத்த ஆசீர்வாதமாக அமைந்தது. கடந்த 25 வருடங்களில் நான் பலமுறை அந்த நாடுகளுக்கு ஊழியம் செய்ய சென்று வந்தேன். ஆனால் இந்தமுறை **சுவிஸ்ஸர்லாந்து,ஜெர்மனியிலும்,பிரான்ஸிலும், இத்தாலியிலும்** செய்த என் ஊழியம் என்றுமில்லாத அளவு நான் பிரசங்கம் நிகழ்த்திய ஒவ்வொரு நாட்டிலும் பெருத்த வெற்றியை அளித்தது. நான் பேசிய ஒரு நாட்டிலும், ஒரு கூட்டமும் சோடை போகவேயில்லை. இத்தாலியில் கடைசி நாள் நடந்த கூட்டத்தில் 3 மணி நேரம் நிறுத்தாமலே தொடர்ந்து பேசினேன். மக்கள் பிரசங்கத்தை கேட்ட விதம் என்னை இன்னும் அதிக நேரம் பேச வைத்தது.

பரவச ஆராதனைகள் நிறைந்த அந்த ஐரேப்பிய தேசங்களில் வசனத்தை கேட்க வாஞ்சையாக உள்ள ஒரு பெருத்த கூட்டத்தை கர்த்தர் எனக்கு காட்டினார். அநேக


ஜாமக்காரன் JAMAKKARAN

**இடங்களில் அந்நியபாஷை பேசும் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் தாங்கள் பிழையான உபதேசத்தில் மக்களை நடத்தியதை என் பிரசங்கத்தில் உணர்த்தப்பட்டு கர்த்தருக்குமுன் அவர்கள் வருந்தி அவர்களாகவே தீர்மானம் எடுத்ததை நேரில் கண்டும் அவர்கள் என்னிடம் கூறிய வார்த்தைகளை மனதில் கொண்டு அவர்கள் உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்தை உறுதிப்படுத்தினேன். கர்த்தருக்கே மகிமை உண்டவாதாக.**

நான் இந்தியாவில் இல்லாத மாதங்களில் எனக்கு காணிக்கை அனுப்பி அவைகள் பத்திரிக்கை ஊழியம் தடையில்லாமல் வழமையாக தபாலில் சேர்க்க உதவிய யாவருக்கும் என் மனைவியுடன் நானும் சேர்ந்து நன்றி கூறுகிறோம்.

நான் இல்லாத நேரத்தில் என் மனைவி **வதனிபுஷ்பராஜ்** அவர்கள் தொலைபேசியில் தொடர்புக்கொண்டவர்களின் **பிரச்சனைகளையும், வியாதி விரங்களையும்** அவர்கள் கூறியபோது அவர்களுக்காக என் மனைவி தொலைபேசியில் ஆலோசனைக்கூறி, ஜெபித்ததை பலர் பாராட்டி என்னிடம் அறிவித்தார்கள்.

இந்தமுறை வெளிநாடுகளில் நடந்த என்னுடைய ஊழிய கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாகவும், அற்புதமாகவும் நடந்து முடிந்தது. இந்தியாவிற்கு வந்தவுடன் திருநெல்வேலி கூட்டங்களுக்கு ஓய்வுஇல்லாமல் போனேன். அந்த கூட்டங்களும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

**ஆன்-லைனில்(வங்கி வழியாக)** காணிக்கை அனுப்புகிறவர்கள் தயவுசெய்து உங்கள் **விலாசம், தொலைபேசி** எண் ஆகியவைகளை ஒவ்வொரு முறையும் எனக்கு எழுதி அனுப்புங்கள். எந்த பேங்கில் எவ்வளவு அனுப்பினீர்கள் என்பதையும் குறிப்பிட்டு எழுதுங்கள். அப்போதுதான் உங்களுக்கு ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**மணியாடர், இ-மெயில், பேங்க் ஆன்-லைன்** மூலமாக காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும்,நன்றியையும் அறிவிக்கிறேன்.

2018 ஜீன் மாதம் நம்முடைய பிள்ளைகளுக்கு பள்ளிகள் தொடங்குவதால் தினமும் அவர்களுக்காக ஜெபிக்கவும். 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பிள்ளைகள் நல்ல பாட பிரிவில் சேர கர்த்தரின் ஆலோசனை பெற்று சேர்க்கவும். தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காவும் ஜெபிக்கிறேன்.

**பள்ளி-கல்லூரி** சேர்க்கைக்கு **பணம்** மிகவும் அதிகம் தேவைப்படும்,இந்த நெருக்கத்திலும் ஜாமக்காரன் ஊழியத்தில் **பணக்குறைவு** ஏற்படாமல் தொடர்ந்து **பணஉதவி** செய்த அத்தனை வாசகர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

கர்த்தர்தாமே நாம் எல்லாரையும் ஆசீர்வதித்து **ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து** ஒருவருக்காக ஒருவர் ஜெபித்து இப்படியாக நாம் யாவரும் கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து சாட்சியாக வாழ்வோம். தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர்.புஷ்பராஜ்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# அரேபியா நாட்டில் என் ஊழியங்கள்

**அரேபியா** நாடுகளில் **குவைத்** நாட்டில் உள்ள **CSI தமிழ் சபைகள்** நடத்திய கூட்டங்களில் பிரசங்கிக்க சிறப்பு அழைப்புப்பெற்று அங்கு சென்று வந்தேன். Rev. அவர்கள் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தினார். சபையில் புதிதாக தெரிந்தெடுக்கப்பட்ட பொருப்பாளர்கள் கூட்ட ஏற்பாடுகளை நல்லமுறையில் செய்து கூட்டம் ஆசீர்வாதமாக அமைய உதவினார்கள். கர்த்தர்தாமே குவைத் நாட்டில் உள்ள தமிழ் சபைகளை விசுவாசித்திலும்,வசனத்திலும் வழிநடத்துவாராக.






# (குவைத்) அஹமதி என்ற இடத்தில் நடந்த CSI கூட்டங்கள்

**குவைத்** CSI தமிழ் சபையின் கிளை சபையான **அஹமதி** CSI சபையினரும் கூட்ட ஏற்பாடுகளை செய்து சபை மக்கள் வசனத்தில் வளர Rev. அவர்களின் தலைமையில் கூட்டத்தை சிறப்பாக நடத்தினர். குவைத் CSI தலைமை ஆயர் கூட்டத்தை தலைமை தாங்கி கூட்டத்தை சிறப்பித்தார். கர்த்தர் இந்த சபையையும் ஆசீர்வதிப்பாராக.





# ஐரோப்பிய நாடுகளில் நடந்த என் கூட்டங்கள்

**சுவிஸ்ஸர்லாந்து** தேசத்தின் தலைநகரான Zurich என்ற நகரில் **மார்டீன் லூத்தர்** ஆரம்பித்த Reform Church ஆலயத்தில் நடந்த கூட்டங்கள் ஆசீர்வாதமாக அமைந்தன. Swiss நாட்டுவாசியான சகோதரன் **Mr.Rainer** அவர்களுடன் சகோதரி.**Rita Schmitz** அவர்களும் இணைந்து இக்கூட்ட ஏற்பாடுகளை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்தனர். சகோதரி.ரீட்டா அவர்கள் தங்கள் இலங்கை தமிழ் இனத்தின் இரட்சிப்புகாக பல ஆண்டுகளாக பாராப்பட்டு பெண்களை கூட்டி சேர்த்து ஜெபகூட்டம் நடத்தி ஊழியம் செய்கிறார்.







## சுவிஸ்ஸர்லாந்து நாட்டில்உள்ள தமிழ் சபைகளின் அவல நிலை:

பிழையான **அந்நியபாஷையைப்பற்றியும்** பரவச ஊழியங்களைப்பற்றியும் மற்றும் **சுவிஸ்** நாட்டு தமிழ் சபை **பாஸ்டர்களின் பாவங்களையும்**,சபை மக்களின் காணிக்கைகளை ஏமாற்றி **ஆடம்பர வாழ்க்கை** நடத்திய **பிரபல பாஸ்டர்களைப்பற்றியும்** பல வருடங்களுக்குமுன் ஜாமக்காரனில் எழுதி அறிவித்தேன். அதனால் சுவிஸ் நாட்டில் பெரும்பாலான பாஸ்டர்களுக்கு நான் **அவர்கள் நாட்டுக்கு வருவது இஷ்டம் இல்லை.** ஆனாலும் உண்மை கிறிஸ்தவ விசுவாசிகள் குறிப்பாக **அந்நியபாஷை** பேசாத வசனத்தின் அடிப்படையில் வாழும் கிறிஸ்தவ விசுவாசிகள் என் கூட்டத்துக்கு பெரும் ஒத்துழைப்பு கொடுத்து மிகசிறப்பாக கூட்டங்களை நடத்தி கர்த்தரின் நாமம் மகிமைப்பட செய்தனர்.

எதிர்பார்த்தற்கும் மேலாக சுவிஸ் நாட்டில்உள்ள மற்ற கள்ள உபதேச ஊழியர்களின் சபைகளிலிருந்தும் மக்கள் வசனத்தை கேட்க நான் பேசிய கூட்டங்களுக்கு திரண்டு வந்தனர். **போலியான பாஸ்டர்களின் சபையில் உள்ள மூப்பர்களும்** என் கூட்டத்தில் கலந்துக்கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர். அவர்கள் என்னை தனியாக சந்தித்து தங்கள் அன்பை பகிர்ந்துக்கொண்டு என்னிடம் **தனித்தனியாக** ஜெபித்து சென்றது இக்கூட்ட வெற்றியின் உச்சநிலையாகும். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

**குறிப்பு:** சுவிஸ் நாட்டு சபைகளில் நடந்த பாவ பிரச்சனைகளையும்,பண ஊழல்களையும் அவர்களின் ஆடம்பர வாழ்க்கைப்பற்றியும் பாஸ்டர்களின் பெயரை குறிப்பிட்டு அவர்களின் பாவ வாழ்க்கையின் ஆதாரத்தோடு முழு விவரங்களையும் சுமார் 17 வருடங்களுக்குமுன் ஜாமக்காரனில் வெளியிட்டேன். அவர்கள் சபை மக்களுக்கு ஊழியர்களைக்குறித்து எச்சரிக்கை செய்து அவர்களுக்கு என் ஆலோசனையும் எழுதினேன். அதனால் சுவிஸ்உள்ள பாஸ்டர்கள் எனக்கு எதிராக வெகுண்டு எழுந்தார்கள். அவர்கள் இந்தியாவில் தங்கள் சபைமூலமாக பணஉதவி செய்யும் சென்னையில் உள்ள (ஏழைபிள்ளைகளுக்கு) ஆதரவு செய்யும் ஸ்தாபனங்களின் பொருப்பாளர்கள் சிலராக சேர்ந்து சென்னையிலிருந்து இந்தியாவில் நான் வசிக்கும் தமிழ்நாட்டில் **சேலம்** என்ற ஊருக்கே ஒரு வேன் வைத்து அடியாட்களை அனுப்பி நான் வீட்டில் இல்லாத நேரத்தில் என் வீட்டின் உள்ளே புகுந்து வீட்டில் உள்ள அலுவலக ஊழியர்களை மிரட்டி வீட்டில் தபாலில் சேர்க்க அடுக்கி வைக்கப்பட்ட ஜாமக்காரன் பத்திரிக்கை களை பறித்து எடுத்து அலுவலர்களிடம் என்னைக்குறித்து எச்சரித்து பேசி வீட்டுக்கு வெளியே சென்று வீதியில் நின்று பத்திரிக்கைகளை கிழித்து எறிந்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். நான் 77 வருடமாக குடியிருக்கும் என் வீடு இஸ்லாமியர்கள் வசிக்கும் வீதியாகும். சுற்றிலும் உள்ள இஸ்லாமிய குடும்பங்கள் யாவரும் என்னையும், என் குடும்பத்தையும் மிகவும் நேசிப்பவர்கள். அவர்கள் யாவரும் விவரம் அறிந்து சென்னையிலிருந்து வந்த அந்த கூட்டத்தை விரட்டியடித்தனர். நான் ஊழியம் முடித்து சேலம் வந்தபோது விவரம் அறிந்து பிரச்சனை உண்டாக்கிய சென்னை பாஸ்டருக்கு கடிதம் எழுதி **சேலத்தில்** என் வீட்டுக்கு வந்ததின் விவரம் கேட்டேன். அவர் உடனே மன்னிப்பு கேட்டு எனக்கு கடிதம் எழுதினார். நாங்கள் **பணஉதவி** பெறும் **சுவிஸ் நாட்டு** பாஸ்டர்தான் எங்களை ஏவிவிட்டு டாக்டர்.புஷ்பராஜ் அவர்களை பயமுறுத்திவிட்டு எச்சரித்துவிட்டு திரும்புங்கள் என்றார் என்று எனக்கு கடிதம் எழுதினார். இதுதான் பல ஆண்டுகளுக்குமுன் நடந்த சம்பவமாகும்.

அதன்பிறகு மறுபடியும் 2018 மே மாதம் 1,2 &,5,6,7 தேதிகளில் என்னை மிரட்டிய அந்த சுவிஸ் பாஸ்டர்கள் நடத்தும் சபையின் அருகேதான் என் ஊழியங்களை துணிந்து நடத்தி மிகப்பெரிய ஆத்தும அறுவடையும் கர்த்தருக்கென்று நிறைவேற்றினேன். அங்கிருந்து ஜெர்மனி தேசம் பயணமானேன். இதில் குறிப்பிட வேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால் அந்த ரௌடிதனம் செய்த அந்த பாஸ்டரின் சபையிலிருந்தும் சில விசுவாசிகள் என் கூட்டத்தில் பங்கெடுத்து என்னிடம் பேசி ஜெபித்து சென்றார்கள் என்பதாகும்.

## சுவிஸ் பாஸ்டர்.பால் சற்குணராஜ் கைதானார்.

17 வருடத்துக்குமுன் நான் மேலே குறிப்பிட்ட பாஸ்டர்.பால் சற்குணராஜ் அவர்கள் சபையில் பெண்களிடம் தவறாக நடந்துகொண்ட விவரங்களை நான் ஜாமக்காரனில் எழுதியபோது அந்த

சபையில் உள்ள சிலர் அதை நம்பவில்லை. ஆனால் 2018 ல் **மார்ச்** மாதம் பாஸ்டர்.பால் சற்குணராஜ் அவர்கள் வருமானத்துக்கு மீறின சொத்துக்களை சேர்த்தார் என்றும், அரசாங்கத்துக்கு கணக்கு காட்டாமல் வீட்டில் பதுக்கி வைத்த பணத்தையும், சுவிஸ் நாட்டு அமலாக்க துறையினர் போலீஸ் உதவியுடன் பாஸ்டர்.பால்சற்குணராஜ் அவர்களை கையும்,களவுமாக பிடித்துவிட்டனர். அவர்கள் பாஸ்டரின் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்ட பணம் அவர் பல கோடி பெருமான பங்களாக்களையும்,லைவ்வாக டிவியில் காட்டினார்கள். அது YouTubeலும் வெளியிடப்பட்டது. அந்த காட்சிகள் இலங்கை தமிழர்களுக்கு குறிப்பாக கிறிஸ்தவ சபை மக்களுக்கு பெரும் தலைக்குனிவை உண்டாக்கியது.

எனக்கும் அந்த டிவி காட்சியை தங்கள் வாட்சாப்பில் ஒரு சகோதரன் போட்டுக்காட்டினார். இப்போது விசாரணை நடந்துக்கொண்டிருக்கிறது. இப்போதுதான் அந்த சபை மக்கள் தங்கள் பாஸ்டர்.பால்சற்குணராஜ் சபை மக்கள் இட்ட காணிக்கை பணத்தில் எப்படி சுகம் அனுபவிக்கிறார் என்பதை சுவிஸ் தமிழர்கள் உணரமுடிந்தது. அன்றே டாக்டர்.புஷ்பராஜ் அவர்கள் பாஸ்டரின் ஊழலைப்பற்றி ஜாமக்காரனில் எழுதினார். இன்று நாங்கள் அவைகளை ஆதாரத்தோடு கண்ணால் பார்த்துவிட்டோம் என்று கூறி வேதனைப்பட்டனர். மற்ற விவரம் இதே ஜாமக்காரனில் மற்ற பக்கத்தில் வாசிக்கிலாம்.

# (SWISS) St.GALAN கூட்டங்கள்:

**சுவிஸ் நாட்டின்** வடக்கு பகுதியில் உள்ள St.Galan என்ற நகரில் 3 நாட்கள் கூட்டங்களும் ஆசீர்வாதமாக அமைந்தன. **சகோ.டேவிட் ஞானரத்தினம்** என்ற சகோதரர் தங்கள் சுவிஸ் நாட்டின் விசாவுக்கு House of God Ministry (St.Galan) என்ற சபையிலிருந்து சுவிஸ் நாட்டின் **அதிகார பூர்வமான சபையின்** அழைப்பு கடிதத்தை எனக்கு அனுப்பி சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார். ஆண்டவர் நாமம் மகிமைப்பட்டது. இக்கூட்டத்துக்கும் Zurich போன்ற பல முக்கிய நகரங்களிலிருந்தும் மக்கள் வந்து கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றனர்.




St.Galan என்ற நகரில் 3 நாட்கள் கூட்டங்களும் ஆசீர்வாதமாக அமைந்தன. **நானும், சகோ.டேவிட் ஞானரத்தினம் அவர்களும் உள்ள படம்.**

# GERMANY தேச ஊழியங்கள்:

**ஜெர்மனி** தேசத்தில் **முதல் தமிழ் சபை** உருவாக கர்த்தர் 1983ம் வருடமே என்னை பயன்படுத்தியதை நினைத்து தேவனை துதிக்கிறேன். அப்படி அன்று ஜெர்மனியில் தமிழ் சபை ஆரம்பிக்க எனக்கு பக்கபலமாக இருந்தவர்கள் பாஸ்டர்.**டேனியல் நவக்குமார்** அவர்களாகும். அவர்களோடு தம்பிகள் **அமுதன், இம்மானுவேல்,அழகேந்திரன்** அவர்களோடு பல சகோதரர்களும் என்னுடன் கூட பிரயாணம் செய்து சுமார் 27000 ஆண்கள் மட்டும் தங்கியிருந்த **இலங்கை அகதிகள் முகாம்களை** சந்தித்து முதன்முறையாக அவர்களுக்கு **சுவிசேஷம் அறிவிக்கும்** பாக்கியத்தை கர்த்தர் எனக்கு அளித்தார்.

அதனால் **ஜெர்மனிதேசம், பெர்லின்** ஆகிய இடங்களில் உருவான சபைகளை மறுபடியும் **வசனத்தில் ஸ்திரப்படுத்தும்** ஊழியத்தை நிறைவேற்ற சுமார் 8 முறை அந்த நாடுகளுக்கு சென்று வந்தேன்.

ஆனால் எனக்கு பிறகு ஜெர்மனி சென்று வந்த நம் இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள **கள்ள ஊழியர்களான பொய்யான அந்நியபாஷை பேசும் ஊழியர்களாலும் வசனத்தின்** அடிப்படையில் நான் ஆரம்பித்த சபைகள் **அந்நியபாஷை,பரவச ஆராதனை** ஆகிய பிழையான உபதேசத்தால் அவர்களை குழம்பி அந்த சபைகள் உருக்குலைந்துபோய் கண்ணாடி துண்டுகள்போல் உடைந்து சிதறிப்போனது. இது என் மனத்துக்கு பெரும் துக்கத்தை உண்டாக்கினது.









**ஜெர்மனி தேசத்தில் உள்ள தமிழ்சபை பாஸ்டர்களின்** தனிப்பட்ட வாழ்க்கையில் சாட்சியினை அவர்கள் பெண்களின் தொடர்பும், பண ஊழல்களும் பெருகி சபையில் பரிசுத்த குலைச்சல் உண்டானது. சபை மக்கள் இவைகளை நேரில் கண்டு அறிந்து இவர்களின் போலித்தனத்தால் இவர்கள் ஆராகிக்க சென்ற தமிழ் சபைகளை தமிழர்களே வெறுக்க ஆரம்பித்தனர். பாவமானது சபையிலும், மக்களிடமும் பெருகின. ஆகவே தமிழர்கள் தங்களையும் தங்கள் வாலிப பிள்ளைகளையும் இவர்களிடம் பாதுகாத்துக்கொள்ள **ஜெர்மனி** பாஷையான **டொச்** பாஷை பேசும் மக்கள் கூடும் **ஜெர்மனி** சபைகளில் சென்று அவர்களோடு இணைந்து ஆராதிக்க தொடங்கிவிட்டனர்.

அப்படி தமிழ் சபைகளை விட்டு பிரிந்து ஜெர்மன் சபையில் ஆராதிக்கும் **தமிழ் பேசும்** உண்மை கிறிஸ்தவர்கள் யாவரும் ஒன்றிணைந்து தாங்கள் ஆராதிக்கும் **ஜெர்மனி சபையான** Christus Gemeinde Oberausen என்ற சபை மூலமாக தலைமை பாஸ்டர்களிடம் பேசி அதிகார பூர்வமான **அழைப்பு கடிதத்தை** எனக்கு அனுப்பி **விசா** பெற ஏற்பாடுகளை செய்து அதே சபையில் சிறப்பான கூட்ட ஏற்பாடுகளை செய்தனர்.

ஜெர்மனி தேசத்தின் பல மாவட்டங்களிலிருந்தெல்லாம் மக்கள் கார்களிலும், ரயிலிலும் பயணம் செய்து கூட்டத்தில் பங்கு கொண்டனர்.

**சுவிஸ்** நாட்டைப்போல ஜெர்மனியிலும் முதல் **தமிழ் சபை** ஆரம்பிக்க அன்று எனக்கு உதவிய அந்த முக்கிய சகோதரர்கள் எல்லாரும் இப்போது **பாஸ்டர்களாகிவிட்டனர்.** ஆகவே தங்கள் சபையினர் யாவரும் டாக்டர்.புஷ்பராஜ் பேசும் கூட்டத்துக்கு பிரசங்கம் கேட்க சென்றால் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தி சபைகளிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று சபைமக்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பை அறிவித்தனர். ஆனால் சபை மக்களோ அவர்களின் எச்சரிப்புக்கு பயப்படாமல் என் கூட்டத்தில் கலந்துக்கொண்டு ஆசீர்வாதம் பெற்றனர்.

டாக்டர்.புஷ்பராஜ் அவர்கள் **பரிசுத்த ஆவியானவர் இல்லை** என்கிறார் என்றும் அவர் **பரிசுத்த ஆவியானவருக்கு அவர் எதிரானவர்** என்ற முத்திரை குத்தினர்.

என் எல்லா கூட்ட பிரசங்கங்ளும் வீடியோ எடுக்கப்பட்டது. அதில் **பரிசுத்த ஆவியானவர் உண்டு** என்பதையும், **பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு அந்நியபாஷை** அடையாளமாக இல்லை என்றும் அது வரம் என்பதைக் குறித்தும் தெளிவான விளக்கத்தை ஒவ்வொரு கூட்டத்திலும் அறிவித்தேன். மக்கள் விழிப்புணர்வு பெற்றனர். பொது கூட்டத்தில் வெளிப்படையாகவே மக்கள் என்னிடம் கேள்விகள் கேட்க வேதவசனம் மூலம் பதிலையும் அவர்களுக்கு அறிவிதேன். இந்தமுறை **ஜெர்மனி நாடெங்கும்** நடந்த கூட்டங்கள் யாவும் இதுவரை நடந்திராத வகையில் மிகப்பெரிய வெற்றியாக அமைந்தது.

**என் பிரசங்க வீடியோ** ஜெர்மனி நாடு முழுவதும் கிறிஸ்தவ மக்களோடு தொடர்ந்து பேசும் நான் பேசிய வீடியோ செய்தி உடனுக்குடன் **வாட்ஸ்அப்பில்** அப்படியே லைவ்வாக வெளியிட்ட அரை மணி நேரத்தில் நூற்றுக்கணக்கான **லைக்ஸ் வாட்ஸ்அப்**பில் காணப்பட்டதாக அறிவித்தனர். அது என் மனதுக்கு பெரும் திருப்தியை உண்டாக்கியது. செய்திகள் அத்தனையும் வீடியோவில் பதித்து **பரவச கூட்ட சபைகளின்** விசுவாசிகளுக்கு இலவசமாக பார்க்கவும், கேட்கவும் கூட்ட ஏற்பாடு செய்தவர்களே விநியோக்கிறார்கள். பலரின் கேள்விகளுக்கு நான் பதில் கூறும் கேள்வி-பதில் பகுதி அனைத்து ஜெர்மனியில் உள்ள சபையினருக்கும் நிச்சயம் ஒரு பெரும் தாக்கத்தை உண்டாக்கும். **பரவச ஆராதனை** நடத்தும் சபை மக்களுக்கும் விழிப்புணர்வும் உண்டாகும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த நகரத்தின் கூட்டங்களை முடித்து **இத்தாலியின் தலைநகர் ரோம் வழியாக இந்தியா வந்து சேர்ந்தேன்.**

ஜெர்மனி கூட்ட ஏற்பாடுகளை வடிவாக செய்த என் பழைய நண்பர் Mr.Dominic அவர்களும் அவர் மகன் Dr.Shane Dominic இவர்களுடன் சகோ.**ஹரி** இன்னும் பல சகோதரர்கள் இணைந்து ஜெபித்து நடத்திய இந்த அற்புத கூட்டங்களுக்காக தேவனை துதிக்கிறேன். ஏற்பாடுகளை செய்த அவர்களுக்கும் என் வாழ்த்துதலை கூறுகிறேன்.

# பிரான்ஸ் தேச கூட்டங்கள்

**இம்முறை** France தேசத்தில் பெரிய அளவில் கூட்டம் நடத்த எனக்கு நாட்கள் இல்லாததால் (France) JUVISY நகரத்தில் மட்டும் கர்த்தரின் வார்த்தையை பகிர்ந்துக்கொண்டேன். இதற்கு முயற்சி எடுத்த சகோதரி.**பஸ்கா**(Marsille), சகோ.**பாபு**, மகள்.**அனிதா** குடும்பத்தினர்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. அந்த கூட்டத்துக்கு என் பழைய வாசகர்களும் வந்திருந்தனர். இக்கூட்டங்களில் கலந்து கொண்ட பெரும்பாலானவர்கள் கத்தோலிக்க சபையை சார்ந்தவர்கள். யாவரும் இந்தியாவில் **பாண்டிச்சேரி,கடலூர்,காரைக்கால்** ஆகிய நகரங்களிலிருந்து குடியேறியவர்கள் ஆகும். கூட்டம் ஆசீர்வாதமாக அமைந்தது.

# இத்தாலி நாட்டு ஊழியங்கள்:

**இத்தாலியில்** உள்ள தமிழ்ர்கள் யாவரும் **இலங்கை யாழ்பாணத்தை** சேர்ந்தவர்கள். இந்த நாட்டுக்கும் நான் பலமுறை சென்று வந்திருக்கிறேன். ஜெர்மனியில் உள்ள இலங்கை தமிழர்களின் பரவச உபதேச தாக்கம் இங்கும் ஏற்பட்டுவிட்டது. சபை மக்களிடம் ஆரம்பித்தில் இருந்த விசுவாச ஜீவியம் பழுதாகி **பரவச ஆராதனை** பக்கம் சாய்ந்து பொய்யான **அந்நியபாஷை** பேசி வசனத்தை விட்டு வழி தவறி போனார்கள். அதில் தப்பி பிழைத்த சகோதரர்தான் **சகோ.அருள்தாஸ்** என்பவராகும். இப்போது இவர் முறையாக வேதாகம கல்வி கற்று பாஸ்டராகி வசன அடிப்படையில் **விடுதலையாக்கும் சத்தியவசன சபை என்ற பெயரில் (Word of Truth Delivarans Church)** இத்தாலியின் பெரு நகரங்களில் ஒன்றான **பலெர்மோ**(Palarmo) என்ற இடத்தில் இவர் சபையை நடத்துகிறார். இந்த முறையம் இவர் ஏற்பாடு செய்த அத்தனை கூட்டங்களிலும் கர்த்தரின் வார்த்தையை பகிர்ந்துக்கொண்டேன்.

**அந்நியபாஷை** பேசும் பரவச ஆராதனையில் கலந்துக்கொள்ளும் தன் இனமான இலங்கை தமிழர்களை எப்படியாவது திசை திருப்பி வசன அடிப்படையிலான ஆராதனையில் அவர்களை கொண்டுவர மிகவும் பாரப்பட்டு உழைக்கிறார்.

இத்தாலியில் நடந்த இவர் சபையின் கூட்டத்தில் என் பிரசங்கத்தை சபை மக்கள் மணிக்கணக்கில் உட்கார்ந்து பிரசங்கம் கேட்க ஆவலாக இருந்ததைக்கண்டு தேவனைத் துதிக்கிறேன். இங்கு நடந்த கூட்டங்களில் நான் பேசிய செய்திகள் யாவும் வீடியோ எடுக்கப்பட்டு மற்ற சபை மக்களுக்கும் பாஸ்டர்களுக்கும் அதை சிடியில் பதிய வைத்த என் பிரசங்கத்தை இலவசமாக அவர்களுக்கு அளிக்க திட்டமிட்டுள்ளனர். கர்த்தர்தாமே இவர்களின் நல்ல முயற்சிகளை ஆசீர்வதிப்பாராக. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

# கேள்வி - பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

## ஏன் நிறுத்திவிட்டீர்கள்?

**கேள்வி: கேள்வி - பதில் பகுதியை ஜாமக்காரனில் ஏன் நிறுத்திவிட்டீர்கள்?**

***பதில்:*** நிறுத்தவில்லை. கேள்விகள் ஏராளமாக குவிந்த வண்ணம் இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு மாதமும் வேறு சில விஷயங்களைப்பற்றி எழுத வேண்டி வந்ததால் கேள்வி-பதில் பகுதிக்கு பதில் எழுத இடமில்லை. வாசகர் விமர்சன கடிதங்களையும் வெளியிடமுடியவில்லை.

## Dr. பில்லிகிரஹாம்

**கேள்வி: டாக்டர்.பில்லிகிரஹாம் அவர்களின் மரணவிவரமும் ஊழிய சிறப்புகளைக் குறித்து பெந்தேகோஸ்தே சபைகளும்,பெந்தேகோஸ்தே உபதேசங்களை கைக்கொள்ளும் சகோ.மோகன் சி.லாசரஸ்,சகோ. R.ஸ்டான்லி போன்ற பலர் தங்கள் சம்பந்தப்பட்ட பத்திரிக்கைகளில் அற்புதமாக புகழ்ந்து எழுதியுள்ளார்கள். இது எதைக் குறிக்கிறது?.**

***பதில்:*** எதையும் குறிக்கவில்லை. உலகமே அவரை புகழும்போது தாங்கள் புகழாமல் இருந்தால் மக்கள் தவறாக எண்ணுவார்களே என்று புகழ்ந்து எழுதியுள்ளார்கள். பொதுவாக இவர்கள் யாவரும் என்னைப்பற்றி குறிப்பிடும்போது Fault- Finder,Negative Minded Person கிறிஸ்தவ ஊழியர்களை குறைக்கூறுபவன், எதிர்மறை சிந்தனைக்கொண்டவன் என்று இவர்கள் கூறுவார்கள். இப்படி என்னைப்பற்றி கூறுபவர்களில் முதன்மையானவர்கள் சகோ.**சாம் ஜெபதுரை,** சகோ.**மோகன் சி.லாசரஸ்** ஆகிய இவர்களோடு கூட்டணி வைத்தவர்கள் அனைவரும் என்னைப்பற்றி இப்படித்தான் கூறுவார்கள்.

இவர்கள் **Dr.பில்லிகிரஹாம்** அவர்களைப்பற்றி புகழும்போது இவர் **பிசாசு துரத்தும்** ஊழியத்தை செய்யவில்லை. வியாதிஸ்தர்களை **சுகமாக்கும் ஊழியத்தையும்** செய்யவில்லை என்றாலும் உலகத்திலேயே 1 கோடி மக்கள் ஒரே இடத்தில் கூடி இவர் பிரசங்கத்தை கேட்டதுதான் கின்னஸ் சாதனையாகும். மேலும் இதன் மூலம் இவர் எத்தனை **உண்மையான ஊழியர்** என்பது தெளிவாகிறது என்றனர். இவர்கள் எல்லாரும் முக்கியமான ஒரு விஷயத்தை ஞானமாய் மறைத்தது தான் இவர்களின் எழுதியது மாயமாலம் என்பதை வெளிப்படுத்துகிறது அதுதான் **அந்நியபாஷை.** இவர் **அந்நியபாஷை** பேசாமலே இத்தனை கோடி மக்கள் மனம் திரும்பினார்களேயானால் **பில்லிகிரஹாம்** அவர்களுக்குள் உள்ள ஆவி எந்த ஆவி?

டாக்டர்.பில்லிகிரஹாமயைப்பற்றி எழுதும்போது இவர்களொல்லாம் ஏன் **அந்நியபாஷையைப்பற்றி** வாய் திறக்காமல் போனார்கள்.

இவரின் அற்புதமான ஊழியத்தைப்பற்றி இந்த ஊழியர்கள் எழுதும்போதாவது இவர்கள் தாங்கள் பேசும் போலியான **அந்நிபாஷையை** மறுபரிசீலனை செய்து **அந்நியபாஷை** பேசாமலும் மற்றவர்களுக்கு அந்நியபாஷை பேச ஆலோசனை கொடாமலும் இருப்பார்களாக!.

# சால்வேஷன் டிவி

**கேள்வி: கடந்த மாதம் ஜாமக்காரனில் சால்வேஷன் டிவியை நடத்துபவர் பெயரை தவறாக குறிப்பிட்டிருந்தீர்கள். அவர் பெயர் சகோ.ஜேம்ஸ் வின்சென்ட் என்பதாகும். சால்வேஷன் டிவியை நடத்தும் சகோ.ஜேம்ஸ் வின்செண்ட்ப்பற்றியும் அவர் டிவி சேனல்பற்றியும் உங்கள் அபிப்ராயத்தை இதுவரை எழுதவில்லையே?.**

***பதில்:*** ஆம். கடந்த ஜாமக்காரனில் பிழையாக குறிப்பிட்ட சல்வேஷன் டிவியை நடத்தும் சகோதரன் பெயரை சகோ.**ஜேம்ஸ்வின்செண்ட்** என்று திருத்திக்கொள்ளவும்.

சகோ.ஜேம்ஸ் வின்செண்ட்டின் பெயர் தவறாக எழுதப்பட்டது. அதற்கு நேரம் இல்லை. அதனால் அவர் பெயர் எனக்கு சரியாக ஞாபகம் இல்லாமல்போனது.

மேலும் இதே நேரமின்மையும், **அவசரமும்தான் ஜாமக்காரனில்** தொடர்ந்து எழுத்து பிழைகள் உண்டாக காரணமாகும். அதை சரிசெய்ய பலர் உதவுவதாக எனக்கு எழுதினாலும் நான் வீட்டில் இருக்கும் நேரமும் அவர்கள் நேரமும் சரிபட்டுவராது.

மிகப்பிரதான காரணம் ஜாமக்காரனில் நிறைய பிரச்சனை உள்ள விஷயங்கள் எழுதுவதால் **இரகசியம் காக்கப்படவேண்டியது** மிக அவசியம். **என் ஊழியத்தின் ஒத்தகருத்து இல்லாத நண்பர்கள் நான் எழுதியதை திருத்தும்போது நான் எழுதிய பிரச்சனைக்குறிய கருத்துக்கள் என் செய்தி அச்சகத்துக்குபோகும்முன் வெளிஉலகத்தில் கசிந்தால் தேவையில்லாத பிரச்சனைகள் உருவாகும். ஆகவே பிழை திருத்தம் செய்ய வெளிஆட்களை நியமிக்க தயங்குகிறேன். எப்படியோ எழுதும் செய்தி வாசகர்களுக்கு போய் சேர்ந்தால் அதுபோதும். எத்தனை எழுத்துபிழைகள் இருந்தாலும் என் வாசகர்கள் வாசிக்கும்போது இரத்த கண்ணீர்விட்டாலும் சகித்துக் கொள்கிறார்கள். என் நிலைமை என் அலைச்சல் என் ஆண்டவருக்கும் தெரியும். என் வாசகர்களுக்கும் தெரியும் அதுபோதும்.**



உள்ள **கிறிஸ்தவ டிவி சேனல்களில் சால்வேஷன் டிவி** கொஞ்சம் பரவயில்லை. காலை தியான நேரத்தில் கொடுக்கப்படும் தியானங்கள் பலருக்கு பிரயோஜனமாக இருப்பதாக கூறகேட்டேன். ஆனால் சகோ.**ஜேம்ஸ் வின்செண்ட்** அவர்களின் செய்தியையே திரும்பதிரும்ப பார்ப்பது பலருக்கு சலிப்பை உண்டாக்கி உள்ளது. அதன் காரணம், என்னவென்றால் பிரசங்கத்தைவிட அவர் **ஆமென் கூறுவதின் எண்ணிக்**கை மிக அதிகம். வார்த்தைக்கு வார்த்தை **ஆமென்** சொல்வது அர்த்தமில்லாததும் கேலிக்குறியதாகவும் காணப்படுகிறது. அவருக்கு அப்படி பேசிய பழக்கப்பட்டுவிட்டது. அதை சரிப்படுத்துவது கடினம் என்று நினைக்கிறேன்.

**ஆமென்** என்றால் **அப்படியே ஆகக்கடவது** என்று அர்த்தம். சில விஷயங்களை உறுதிப்படுத்த எபிரேயர்கள் ஆமென் என்ற பதத்தை உபயோகிப்பார்கள்.

ஆனால் இன்று சகோ.ஜேம்ஸ்வின்செண்ட் மட்டுமல்ல, பெரும்பாலான பாஸ்டர்கள் இவரைப்போலவே **ஆமென்,அல்லேலுயா** என்ற வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். இதிலே பெரும் அபத்தமான அர்த்தம் உண்டாகும் வார்த்தைகள் பிரசங்கத்தில் உபயோகிக்கவேண்டிவரும்.

**சகோ.ஜேம்ஸ் வின்சென்ட்** அவர்கள் பேசும்போது தன் ஊழியத்துக்கு **இன்னும் 3 மாதத்தில் இத்தனை லட்சங்கள் தேவைப்படுகிறது** என்று பேசுகிறார். இதை சொல்லி முடிக்கும்முன் பலமுறை **அல்லேலுயா** கூறிவிட்டார். இதற்கு மேல் அவர் கூறிய வார்த்தையில் உண்டாகும் ஆபத்தை உணராமல் போய்விட்டார். **இத்தனை லட்சங்கள் கிடைக்காவிட்டால் சேனல் நின்றுவிடும். ஆமென். இப்படிப்பட்ட நெருக்கத்தின் மத்தியில் உங்களிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். ஆமென்**. இப்படி **ஆமெனுக்கு அர்த்தம் இல்லாமல்** பேசியது விளையாட்டுதனம்போல் ஆகிவிடும்.

பலர் **சாட்சி சொல்லும்போது** எங்கள் குடும்பத்தில் முதல் சகோதரி தூக்கில் தொங்கி மரித்தாள். **கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்பார்கள்!.** அடுத்து அடுத்து நடந்த விபத்தினால் நான் தொழில் செய்யமுடியாமல் முடங்கிப்போனேன் **ஆமென் என்பார்கள்!.** நாங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்த **குடும்பம் ஆனால் எங்கள் குடும்பம் இப்போது நடுத்தெருவில்** வந்தது. இப்போது மற்றவர்களிடம் கை ஏந்த வேண்டிய நிலை எங்களுக்கு ஏற்பட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்பார்கள்!.

மேலே கூறிய **சாட்சிகளில்** எத்தனை **பெரிய முட்டாள்தனம்** காணப்படுகிறது. சகோதரி தூக்கில் தொங்கினாள் என்று கூறியதோடு **கர்த்தருக்கு ஸ்தோத்திரம்** என்ற வார்த்தை **ஆமென்** என்ற **வார்த்தை ஏன் உபயோகிக்க வேண்டும்?. தூக்கில் தொங்கினது நல்லது** என்கிறார்களா! **கர்த்தருக்கு ஸ்தோத்திரம்** என்றால் என்ன அர்த்தம். **நன்றி என்றுதானே அர்த்தம். ஆமென்** என்றால் **அப்படியே ஆகக்கடவது** என்றால் அப்படியே **பலர் தூக்கில் தொங்கி மரிக்கட்டும்** என்று அர்த்தம் ஆகிவிடுகிறதல்லவா!. கொஞ்சமாவது யோசிக்ககூடாதா?. **ஆமென்- அல்லேலுயா** என்பது இன்று விளையாட்டு வார்த்தையைப்போல ஆகிவிட்டது.

❖ 29.05.2018 அன்று காலை 9 மணிக்கு சால்வேஷன் டிவியில் ஒரு பாட்டை ஒரு பெண் பாடுகிறாள். சினிமாவில் காதலன்- காதலியின் தொட்டு ஸ்பரசத்தின் காம எண்ணத்தோடு பாடுவதைப்போல பாடுகிறாள். அந்த பாட்டின் வரிகள் இதுதான் **"யாருமில்லா நேரத்தில் என் கைபிடித்தவரே!, என்னை தொட்டவரே!** இன்னும் பல வார்த்தைகள் எனக்கு ஞாபகம் இல்லை. இதன் இராகம் ஒரு சினிமாவில் காதலன்-காதலி பாடும் பாட்டின் இரகத்தை அப்படியே காப்பியடித்து பாட வைத்திருக்கிறார்கள்.

**இயேசு யாரும் இல்லாத நேரத்தில் அவளிடம் வரவேண்டுமா? அவளை கைப்பிடித்து இழுக்கவேண்டுமா**? என்ன அக்கிரமம் இது. கிறிஸ்தவ பாடல்களை பெண்களை வைத்து பாடவைத்து பாடும் இப்படிப்பட்ட பாடல்கள் **ஏஞ்சல் டிவியில்தான்** வந்துக்கொண்டிருந்தது. இப்போது **ஆசீர்வாத டிவி, சால்வேஷன் டிவி** இவைகளிலும் வந்து **கிறிஸ்தவ வாலிப பெண்களை** எங்கோ தவறான கற்பனைக்கு கொண்டுப்போகிறதே!. ஜாக்கிறதை!. **கர்த்தர் கொடுத்த தாலந்துகளை தவறாக** உபயோகிக்கும்போது கர்த்தருக்கு கணக்கு கொடுக்க வேண்டிவரும். ஜாக்கிறதை!.

# முக்கிய அறிவிப்பு

**டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு வாட்ஸ்அப், பேஸ்புக் எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக் குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் அந்த வாட்ஸ்அப், பேஸ்புக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன்.**

**அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன். - டாக்டர் புஷ்பராஜ்**



# பைபிள் ஆலோசனைகள் நம் நவீன காலத்துக்கு ஒத்துவருமா?

**பைபிள் ஆலோசனைகள் நம் நவீன காலத்துக்கு ஒத்துவருமா?** சிலர் இல்லை என்று சொல்கிறார்கள். 1920-ல் வெளிவந்த அந்த காலத்தில் வேதியியல் பாடப் புத்தகத்தை வைத்துக்கொண்டு இன்று எப்படிப் பாடம் நடத்த முடியாதோ? அதேபோல பைபிளை வைத்துக்கொண்டு இன்று எதையும் செய்ய முடியாது என்று ஒரு டாக்டர் சொன்னார். ஒன்றுக்கு உதவாத பழைய கம்யூட்டரின் கையேட்டை வைத்துக்கொண்டு ஒரு புது கம்யூட்டரை இயக்குவீர்களா என்று பைபிளை மதிக்காத ஒருவர் கேட்கலாம். அதை உதாரணமாக்கி பைபிள் நம் நவீன காலத்துக்கு ஒத்துவரவே வராது என்று சிலர் சொல்கிறார்கள்.

இந்த நவீன **உலகில் மிகவும் பழமையான ஒரு புத்தகத்தை ஏன் படிக்க வேண்டும்** என்று சிலர் யோசிக்கலாம். வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகளும், புத்திமதிகளும் எண்ணற்ற வெப்சைட்டுகளில் தொடர்ந்து வந்துக்கொண்டே இருக்கின்றன. டி.வி. நிகழ்ச்சிகளில்கூட மனநல மருத்துவர்களும், ஆலோசகர்களும், எழுத்தாளர்களும் வாழ்க்கைக்குப் பிரயோஜனமான விஷயங்களைப்பற்றி நிறைய பேசுகிறார்கள். அதோடு சுயஉதவி புத்தகங்களும் ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன. அந்த புத்தகங்கள் பல கோடி ரூபாய்க்கு விற்பனையாகின்றன.

புதுப்புது தகவல்கள் சுலபமாக கிடைப்பதால் சுமார் 2000 வருஷங்கள் முன்பு எழுதி முடிக்கப்பட்ட பைபிளை நாம் வாசிக்கவேண்டுமா? பைபிளைப் பயன்படுத்துவது பழைய வேதியியல் புத்தகத்தையோ பழைய கம்யூட்டர் கையேட்டையோ பயன்படுத்துவதுபோல இருக்கிறது என்று பைபிளை மதிக்கதாத சிலர் சொல்வது சரியா? உண்மையிலேயே அவர்களுடைய கருத்து தவறானது என்றுதான் சொல்ல வேண்டும். அறிவியலும்,தொழில்நுட்பமும் வேகமாக மாறிக்கொண்டே இருக்கின்றன. ஆனால் மனிதனின் நியாயமான எதிர்பார்ப்புகள் மாறியிருக்கின்றனவா? மக்கள் வாழ்க்கைக்கான அர்த்தத்தை இன்னமும் தேடிக்கொண்டேதான் இருக்கிறார்கள். வாழ்க்கையில், சந்தோசமும், பாதுகாப்பும் இருக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். **நட்புக்காகவும், பந்த பாசத்துக்காகவும்** ஏங்குகிறார்கள்.

**பைபிள்** ஒரு பழமையான புத்தகமாக இருந்தாலும் **மனிதர்களுடைய எதிர்பார்ப்புகளை** அது பூர்த்தி செய்கிறது. பரிசுத்த ஆவியினவரின் துாண்டுதலால்தான் பைபிள் எழுதப்பட்டிருக்கிறது என்று வேதமே சொல்கிறது. நம் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்துக்கும் தேவையான ஆலோசனைகளை பைபிள் தருகிறது. எந்தவொரு பிரச்சனையையும் சமாளிக்க அது உதவுகிறது. (2 தீமோத்தேயு 3:16,17) அதில் இருக்கும் ஆலோசனைகள் காலத்தால் அழியாதவை என்றும் அது சொல்கிறது. **"கடவுளுடைய வார்த்தைக்கு உயிர் இருக்கிறது"** என்ற பைபிளே சொல்கிறது.-எபிரெயர் 4:12.

பைபிள் சொல்லும் விஷயங்களை நாம் நம்பலாமா? அது நம் காலத்துக்கு ஒத்துவருமா? இன்று நம் **வாழ்க்கைக்கு தேவையான ஆலோசனைகள்** அதில் இருக்கின்றனவா? இந்தக்

பைபிள் ஆலோசனைகள் காலத்தால் அழியாத ஞானம். இதைக் கற்பனை செய்துபாருங்கள்: பழங்காலத்து நினைவுச்சின்னங்கள் இருக்கிற ஓர் அருங்காட்சியகத்தை(Museum) நீங்கள் சுற்றிப் பார்க்கிறீர்கள். அங்கிருக்கிற பெரும்பாலான நினைவுச் சின்னங்கள் பாழாய் கிடக்கின்றன. சீதோஷ்னம் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன, அரிக்கப்பட்டிருக்கின்றன. சில நினைவுச் சின்னங்களின் பெரிய பெரிய பாகங்களைக் காணவில்லை.

ஆனால் நுணுக்கமான வடிவமைப்பைக் கொண்ட ஒரு நினைவுச் சின்னம் மட்டும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் அப்படியே இருக்கிறது. உடனே "இது புதுசா?" என்று உங்கள் சுற்றுலா வழி காட்டியிடம் (Tour Guide) கேட்கிறீர்கள். **"இல்ல இது ரொம்ப பழசு அத நாங்க புதுப்பிக்கவே இல்ல"** என்று அவர் சொல்கிறார். அதற்கு நீங்கள் சீதோஷணத்தால் பாதிக்கப்படாமல் இருக்க இது பத்திரமாக புயலயும் மழையயும் தாக்குப் பிடிச்சு இருக்கு நிறைய பேர் இத சேதப்படுத்த முயற்சி செஞ்சிருக்காங்க" என்று அவர் சொல்கிறார். இப்போது உங்கள் மனதுக்குள் ஒரு கேள்வி வருகிறது: "அப்படீனா இது எதனால கட்டப்பட்டிருக்கு?" என்றார்.

ஒரு விதத்தில் பைபிளும் இந்த அருமையான நினைவுச் சின்னத்ததைப் போலத்தான் இருக்கிறது. பெரும்பாலான **புத்தகங்களைவிட பைபிள் மிகவும் பழமையானது.**

பைபிளைத் தவிர மற்ற பழமையான புத்தகங்கள் இருந்தாலும் இவை அந்த நினைவுச் சின்னங்களைப்போல மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன.

அந்த பழையான மற்ற புத்தகங்களில் அறிவியலைப்பற்றி சிலர் சொன்ன விசயங்கள் புதுப்புது தகவல்களோடும் **நிரூபிக்கப்படக்கூடிய உண்மைகளோடும் ஒத்துப்போகவில்லை. அவற்றில் இருக்கிற மருத்துவ ஆலோசனைகளும் ஆபத்தானவையாகவே இருக்கின்றன.** அந்தத் துண்டுகளின் சில பாகங்கள் தொலைந்துபோய்விட்டன அல்லது மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன.

இந்தக்குறிப்பிட்ட பழமையான புத்தகங்களைவிட **பைபிள்** ரொம்பவே வித்தியாசமானது. பைபிள் 3500 வருஷங்களுக்கு முன்பே எழுத ஆரம்பிக்கப்பட்டு விட்டிருந்தாலும் பைபிளில் எந்த முரண்பாடும் இல்லை. பல நூற்றாண்டுகளாக பைபிள் **பல தடவை எரிக்கப்பட்டிருக்கிறது.. தடை செய்யப்பட்டிருக்கிறது. கேவலமாகப் பேசப்பட்டிருக்கிறது.** ஆனால் இவை எல்லாவற்றையும் அது தாக்குப்பிடிருக்கிறது. இன்றுள்ள அறிவியலோடு பைபிள் ஒத்துப்போகிறது. அதோடு எதிர்காலத்தைப் பற்றிய விசயங்களையும் அது சொல்கிறது.

**வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகள்:** பைபிள் ஆலோசனைகள் உண்மையிலேயே நடைமுறைக்கு ஒத்துவருமா? என்று நீங்கள்யோசிக்கலாம். இதற்கான பதிலைத் தெரிந்துகொள்ள இப்படி யோசித்துப் பாருங்கள்: இன்னைக்கு மனுசங்க என்னென்ன பிரச்சினைகள் அனுபவிக்க ரொம்ப மோசமா இருக்கு?. ஒருவேளை போர் துாய்மைக்கேடு குற்றச்செயல் அல்லது ஊழல் போன்ற பிரச்சினைகள் **உங்கள் ஞாபகத்துக்கு வரலாம். இப்போது பைபிளில் இருக்கும் சில அடிப்படை ஆலோசனைகளைக் கவனியுங்கள்.**

பிறகு உங்களையே இப்படிக் கேட்டுக்கொள்ளுங்கள்: **மக்கள் இந்த பைபிள் ஆலோசனைகளின்படி வாழ்ந்தால் உலகம் எப்படி இருக்கும்?.**

# (இயேசுகிறிஸ்துவின் மலை பிரசங்கத்திலிருந்து சில ஆலோசனைகள்)

**சமாதானமாக இருங்கள்:** "சமாதானம் பண்ணுகிறவர்கள் சந்தோசமானவர்கள்(பாக்கியவான்கள்) ஏனென்றால் அவர்கள் கடவுளுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள்". (மத்தேயு 5:9) "கூடுமானால் உங்களால் முடிந்தவரை எல்லாரோடும் சமாதானமாக இருங்கள்."ரோ 12:18

## இரக்கம் காட்டுங்கள் மன்னியுங்கள்:

**"இரக்கம் காட்டுகிறவர்கள் சந்தோசமானவர்கள்(பாக்கியவான்கள்) ஏனென்றால் அவர்களுக்கு இரக்கம் கிடைக்கும்".** (மத்தேயு 5:7) **"ஒருவர்மேல் ஏதாவது மனக்குறை இருந்தால் ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளுங்கள் தாராளமாக மன்னியுங்கள். கர்த்தர்** உங்களைத் தாராளமாக மன்னியுங்கள்."-கொலோசெயர் 3:13.

## ஒற்றுமையாக இருங்கள்:

கடவுள் **"ஒரே மனுஷனிலிருந்து எல்லா தேசத்து மக்களையும் உண்டுபண்ணி அவர்களைப் பூமி முழுவதும் குடியிருக்க வைத்திருக்கிறார்."** (அப்போஸதலர் 17:26) **"கர்த்தர் பாரபட்சம் காட்டாதவர்... அவருக்குப் பயந்து சரியானதைச் செய்கிறவன் எந்தத் தேசத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அவனை அவர் ஏற்றுக்கொள்கிறார்."**-அப்போ 10:34 35.

## பூமியைப் பராமரியுங்கள்:

**"கர்த்தர் மனிதனை ஏதேன் தோட்டத்தில் குடிவைத்து அதைப் பண்படுத்தவும் பராமரிக்கவும் சொன்னார்."** (ஆதியாகமம் 2:15) கர்த்தர் **"பூமியை நாசமாக்குகிறவர்களை"** நாசமாக்கப்போகிறார்.-வெளிப்படுத்துதல் 11:18.

## பொருளாசை மற்றும் ஒழுக்கக்கேட்டை வெறுத்திடுங்கள்:

**"எல்லா விதமான பொருளசைக்குறித்தும் எச்சரிக்கையாக இருங்கள்: ஏனென்றால் ஒருவனுக்கு ஏராளமான சொத்து இருந்தாலும் அது அவனுக்கு வாழ்வைத் தராது."** (லூாக்கா 12:15) **"பாலியல் முறைகேடு(வேசித்தன) எல்லா விதமான அசுத்தம் பொருளசை ஆகியவற்றைப்பற்றி உங்களுக்குள்ளே சொல்லபடக்கூடாது. இவை பரிசுத்தமான மக்களுக்கு ஏற்றவை அல்ல."**-எபேசியர் 5:3.

## நேர்மையாக இருங்கள் கடினமாக உழையுங்கள்:

**"நாங்கள் எல்லாவற்றிலும் நேர்மையாக(யோக்கியமாக) நடக்க விரும்புகிறோம்."** (எபிரெயர் 13:18) **"திருடுகிறவன் இனி திருடாமல் இருக்க வேண்டும்: நேர்மையாக உழைக்க வேண்டும்."**- எபேசியர் 4:28.

## கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவுங்கள்:

"மனச்சோர்வால் வாடுகிறவர்களிடம் ஆறுதலாகப் பேசுங்கள் பலவீனமாக இருப்பவர்களுக்கு ஆதரவு கொடுங்கள் எல்லாரிடமும் பொறுமையாக இருங்கள்."(1 தெசலோனிக்கேயர் 5:14) "கஷ்டப்படுகிற அநாதைகளையும் விதவைகளையும்(விசாரியுங்கள்) கவனித்துக்கொள்ளுங்கள்.-யாக்கோபு 1:27.

நாம் என்ன செய்ய வேண்டும் என்று மட்டுமல்ல அதை எப்படிச் செய்ய வேண்டும் என்றும் பைபிள் சொல்கிறது. பைபிளில் இருக்கிற இந்த ஆலோசனைகளை மக்கள் தங்க்ள வாழ்க்கையில் கடைப்பிடித்தால் உலகத்தில் இவ்வளவு பிரச்சினைகள் இருக்காது இல்லையா? அப்படியென்றால் **பைபிள் ஆலோசனைகள் காலத்தால் அழியாதவை இப்போதே உங்களுக்கு என்னென்ன** நன்மைகளைத் தருகிகன்றன?.

கடவுளுடைய பெயர் **யெகோவா** என்பதாக பைபிள் சொல்கிறது. சங்கீதம் 83:18.

பைபிள் ஆலோசனைகளிலிருந்து நீங்கள் இப்போதே என்னென்ன நன்மைகளை அனுபவிக்கலாம்?

ஞானமானது அதன் பிள்ளைகளால் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் (மத்தேயு 11:19) ஞானமாகச் செயல்படுவதால் கிடைக்கிற பலனை வைத்ததுதான் ஞதன்ம எந்தளவு சிறந்தது என்று சொல்ல முடியும். அப்படியென்றால் நீங்கள் ஒருவேளை இப்படி யோசிக்கலாம்: பைபிள்ல வாழ்க்கைக்கு தேவையான ஆலோசனைகள் இருந்தா அது எனக்கு நல்ல பலன்கள் தரணும் இல்லையா? இப்போ இருக்குற **என்னோட பிரச்சினைகள் தீர்க்க அது எனக்கு உதவணும்** இல்லையா?.

இதற்கு ஓர் உதாரணத்தைக் கவனியுங்கள். டெல்பின் என்ற ஒரு பெண்ணின் வாழ்க்கை பரபரப்பாக ஓடிக்கொண்டிருந்தது. வாழ்க்கையில் எந்த குறையும் இல்லாமல் அவர் சந்தோஷமாக இருந்தார். ஆனால் எதிர்பாரமால் அடுத்தடுத்து பல பிரச்சினைகள் அவரை இடியாய் தாக்கின. டீனேஜ் வயதில் இருந்த அவருடைய மகள் இறந்துவிட்டாள் அவளுடைய கல்யாண வாழ்க்கை முறிந்தது திடீரென பொருளாதார கஷ்டமும் ஏற்பட்டது. "மகள் கணவன் வீடுனு நான் எல்லாத்தயும் இழந்துட்டேன். இப்போ நிர்க்கதியா நிக்குறேன். **"நான் எதுக்காக உயிரோடு இருக்கேன்னு எனக்கே தெரியல"** என்று அவர் சொல்கிறார்.

பைபிளின் வார்த்தைகள் எவ்வளவு உண்மை என்பதை டெல்பின் என்ற அந்த பெண் இப்போது உணருகிறார்: "எங்களுடைய ஆயுள் 70 வருஷம் நிறைய தெம்பு இருந்தால் 80 வருஷம் ஆனால் அவை **துன்ப துயரங்களால்தான் நிறைந்திருக்கின்றன.** அவை துன்ப துயரங்களால்தான் நிறைந்திருக்கின்றன. அவை வேகமாக ஓடிவிடுகின்றன நாங்களும் பறந்து விடுகிறோம்".-சங்கீதம் 90:10.

அந்த வேதனையான அந்த காலகட்டத்ததில் டெல்பின் என்ற அந்த பெண்ணுக்கு பைபிள் கைகொடுத்தது. அவளுடைய வாழ்க்கைக்கு அர்த்தம் கிடைத்தது. அவரைப் போல பிரச்சினைகளில் **தவித்துக்கொண்டிருந்த நிறையபேர் பைளில் ஆலோசனைகளைத் தங்கள்**

வாழ்க்கையில் கடைப்பிடித்ததால் எப்படி நன்மை அடைந்தார்கள் என்பதைப் பற்றி அடுத்து வரும் மூன்று கட்டுரைகளில் பார்க்கலாம். ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அந்த அருமையான நினைவுச் சின்னத்தைப் போல பைபிள் இருப்பதாக அவர்கள் உணருகிறார்கள். பைபிள் மற்ற புத்தகங்களைப் போல பழையதாகி ஒன்றுக்கும் உதவாமல் போகவில்லை அதற்குக் காரணம் என்ன? அதில் மனிதர்களுடைய எண்ணங்கள் இல்லாமல் **கடவுளுடைய எண்ணங்கள் இருப்பதுதான் அதற்குக் காரணமா?**-1 தெசலோனிக்கேயர் 2:13.

நம்முடைய வாழ்நாள் குறுகியது என்றும் அதில் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன என்றும் உங்களுக்குத் தெரியும். பிரச்சினைகள் உங்களை வாட்டி வதைக்கும்போது ஆறுதலுக்காக...உதவிக்காக... நம்பகரமான ஆலோசனைகளுக்காக...யாரிடம் போவீர்கள்?

1 பிரச்சினைகளைத் தவிர்க்கவும்..

2 பிரச்சினைகளைச் சரிசெய்யவும்...

3 மாற்ற முடியாத சூழ்நிலைகளைச் சகிக்கவும்..

பைபிள் உங்களுக்கு நடைமுறையான ஆலோசனைகளைத் தருகிறது.

அடுத்து வரும் கட்டுரைகள் இந்த மூன்று விஷயங்களைப் பற்றி விளக்கும்.

# பிரச்சினைகளைத் தவிர்க்க உதவி:

பைபிளில் இருக்கிற ஆலோசனைகள் யாவும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலால் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் **"அவை கற்றுக்கொடுப்பதற்கும் கண்டிப்பதற்கும் காரியங்களைச் சரிசெய்வதற்கும். ......... பிரயோஜனமுள்ளவையாக இருக்கின்றன"** என்றும் அது சொல்கிறது. (2 தீமோத்தேயு 3:16).

இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? மிக மோசமான பிரச்சினைகளைத் தவிர்க்க பைபிள் எப்படி உதவுகிறது என்று இப்போது கவனிக்கலாம்.

## அதிகமாகக் குடிக்கு அடிமையாவது:

போன கட்டுரையில் குறிப்பிடப்பட்ட டெல்பின் என்ற அந்த பெண் தன் கவலைகள்தான் தன்னை அளவுக்கு அதிகமாகக் குடிக்க தூண்டியதாக நினைத்தார். ஆனால் **"ஆனால் பைபிள் கூறுகிறது அளவுக்கு அதிமாகத் திராட்சமது குடிக்கிறவர்களோடு... சேர்ந்துக்கொள்ளாதே"** என்று அது சொல்கிறது. (நீதிமொழிகள் 23:20).

ஏனென்றால் **அளவுக்கு அதிகமாகக் குடிப்பதால்** நிறைய உடல்நல பிரச்சினைகள் வருகின்றன. **குடும்ப உறவுகளுக்குள் விரிசல் ஏற்படுகின்றன.** அதோடு ஒவ்வொரு வருஷமும் பல லட்சக்கணக்கான மக்கள் குடியினால் இறந்துபோகிறார்கள். பைபிளில் இருக்கிற ஆலோசனைகளைப் பின்பற்றினால் இப்படிப்பட்ட பிரச்சினைகளை நம்மால் தவிர்க்க முடியுமே!.

டெல்பின் அந்த பெண் அதைத்தான் செய்தார்.அவர் என்ன சொல்கிறார் என்று கவனியுங்கள்: "குடிக்குறதுனால என்னோட பிரச்சினைகள் சரியாகலனு நான் புரிஞ்சுக்கிட்டேன். பிலிப்பியர் 4:6 7-ல இருக்குற ஆலோசனைய என் வாழ்க்கையில் கடைப்பிடிச்சேன்.

**நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள்:** உங்களுடைய எல்லாம் விண்ணப்பங்களையும் நன்றியோடுகூடிய ஜெபத்தின் மூலம் கர்த்தரிடம் சொல்லுங்கள். இதன்படி ஒவ்வொரு ராத்திரியும் என் யோசனைகள் அலைமோதும்போதும் என் கவலைகள் என்னை வாட்டிவதைக்கும்போதும் நான் ஜெபம் செஞ்சேன். கோபம் வருத்தமும் ஏமாற்றம்னு என்னோட எல்லா உணர்ச்சிகளையும் கர்த்தரிடம் கொட்டினேன். நல்ல விஷயங்கள் பத்தியே யோசிக்குறதுக்கு வழி காட்டுங்களேன்னு கெஞ்சுனேன். காலையில் எழுந்திருக்கும்போது அப்படிப்பட்ட எதிர்மறையான உணர்ச்சிகள் எனக்குள்ள வராம பார்த்துக்கிட்டேன். இப்படி நான் ஜெபித்தாலும் என்கிட்ட இல்லாத விஷயங்கள பத்தி யோசிக்குறதுக்கு பதிலா என்கிட்ட இருக்கிகுற விஷயங்கள் பத்தி யோசிக்க உதவி செஞ்சுது. அதுக்கு அப்புறம் நான் குடிக்கவே இல்ல. ஏன்னா எனக்கு கிடைச்ச சமாதானம் ரொம்ப பெருசா இருந்தது அதை இழக்க நான்விரும்பல." பைபிளில் இருக்கிற ஆலோசனைகள் பிரச்சினைகளைத் தவிர்க்க உதவுகின்றன:

## ஒழுக்கக்கேடு:

சில பிரச்சினைகள் அதிக வேதனையையும், துக்கத்தையும் தருகின்றன. ஆனால் அப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தவிர்க்க பைபிள் உதவி செய்கிறது. எப்படி? அது போன்ற பிரச்சினைகளுக்குக் காரணமாக இருக்கிற விஷயங்களைச் சரிசெய்வதன் மூலம் **ஒழுக்கக்கேட்டைத் தவிர்க்க பைபிள்** உதவுகிறது. உதாரணத்துக்கு கல்யாணம் செய்துக்கொள்ளும் எண்ணம் இல்லாமல் **ஒருவரிடம் நெருங்கிப் பழகுவது** ஆபாசப் படங்களைப் பார்ப்பது போன்றவற்றைச் சரிசெய்வதன் மூலம் ஒழுக்கக்கேட்டைத் தவிர்கக பைபிள் உதவுகிறது. **"நான் நிறைய பொண்ணுங்ககிட்ட நெருங்கி பழகுனேன்"** என்று சொல்கிறான் சாமுவேல் என்ற இளைஞன். **"சில சமயங்கள்ல அவளிடம் சும்மா கிட்ட நெருங்கி பழகலாமேனு நினைப்பேன்"** என்று அவன் சொன்னான். ஆனால் சாமுவேல் இப்படித் தேவையில்லாமல் பெண்களிடம் நெருங்கிப் பழகுவதாக அவனைப்பற்றி மற்றவர்கள் பேச ஆரம்பித்தார்கள். சில சமயங்களில் அவன் அப்படிச் செய்யவில்லை என்றாலும் அவனைப்பற்றி பலர் தவறாகப் பேசினார்கள். அதனால் வேண்டுமென்றே பெண்களிடம் நெருங்கிப் பழகவேண்டும் என்று அவன் தீர்மானித்தான். ஆனால் அதேசமயம் மனசாட்சியில் இதை நினைத்து அவன் கவலைப்பட்டான். **"இப்படி செய்றது சரியில்ல: அது சுயநல ஆசைகளதான் எனக்குள்ள வளர்த்தது"** என்று சாமுவேல் சொல்கிறான்.

நீதிமொழிகள் 20:11-ல் இருக்கிற விஷயத்தைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தான். **"சிறுபிள்ளையைக்கூட அதனுடைய செயலில் வைத்தே எடைபோடமுடியும். அவனுடைய நடத்தை சுத்தமாகவும் சரியாகவும் இருக்கிறதா என்று தெரிந்துக்கொள்ள முடியும்"** என்று வசனம் சொல்கிறது. தேவையில்லாமல் ஒரு பெண்ணிடம் நெருங்கிப் பழகுவது சரியாக இருக்காது என்பதை சாமுவேல் புரிந்துக்கொண்டான். "தேவையில்லாமல் ஒரு பொண்ணுகிட்ட நெருங்கி பழகுறது எதிர்காலத்துல ஒரு நபர் அந்த பெண்ணுக்கு கணவனாக இருக்க உதவி செய்யாது.

நான் வேறொரு பொண்ணோட இப்படி நடந்துக்குறத **என் வருங்கால மனைவி** பார்த்தா அவளுக்கு எப்படி இருக்கும்னு யோசிக்க ஆரம்பிச்சேன். அது தப்புனு புரிஞ்சுக்கிடேன். பொண்ணுங்ககிட்ட நெருங்கி பழகுகிறது ரொம்ப சுலபமா இருக்குங்குறதுனால அது சரியான விஷயம்னு சொல்லிட முடியாது" என்று சாமுவேல் அனுபவ வாயிலாக சொல்கிறான். அதன் பிறகு அவன் அப்படிச் செய்யவே இல்லை ஒழுக்கக்கேட்டில் ஈடுபடுவதிலிருந்து வேத வசனங்கள் அவனைப் பாதுகாத்தது.

**ஒழுக்கக்கேட்டில் ஈடுபடும் ஆபத்து** வேறொரு நபருக்கு இருந்தது. அவர் ஆபாசத்துக்கு அடிமையாக இருந்தார். தன் மனைவியை அவர் அதிகமாக நேசித்தாலும் அவர் திரும்பத் திரும்ப ஆபாசத்தை பார்த்தார். பிறகு 1 பேதுரு 5:8-ல் இருக்கிற விஷயம் அவருக்கு உதவி செய்ததாகச் சொல்கிறார். "தெளிந்த புத்தியோடு இருங்கள் **விழிப்புடன் இருங்கள்** உங்கள் எதிரியான பிசாசு கர்ஜிக்கிற சிங்கம்போல் **யாரை விழுங்கலாம்** என்று அலைந்து திரிகிறான்" என்று இந்த வசனம் சொல்கிறது. **"இந்த உலகத்துல திரும்புற பக்கமெல்லாம் ஆபாசப் படங்கள்** இருக்குறதுனால அது நம்ம மனசுல ஆழமா பதிஞ்சிடும். தவறான ஆசைகளுக்கு எது காரணமா இருக்ககுறத யோசிக்க பார்க்க இந்த வசனம் எனக்கு உதவி செஞ்சுது. **ஆபாச படங்கள்** இருக்குறதுனால ஆபாச படங்கள் சாத்தான்கிட்ட இருந்துதான் வருதுங்குறத உடனே ஞாபகத்துக்கு கொண்டுவரணும்னு தெரிஞ்சுக்கிட்டேன். என் மனசயும் இதயத்தையும் திருமண வாழ்க்கையையும் பாதிக்கிற இந்த கெட்ட பழக்கத்தை எதிர்த்து போராடணும்னு தெரிஞ்சுக்கிட்டேன். அதுக்கு தெளிந்த புத்தியோடு இருக்கவும் விழிப்போடு இருக்கவும் கர்த்தரால்தான் உதவி செய்ய முடியும்னு இப்போ புரிஞ்சுக்கிட்டேன்" எந்த மனுஷனும் தன்னை மாற்றிக்கொள்ளமுடியாது என்பதையும் விளங்கிக்கொண்டேன் என்று அந்த நபர் கூறகேட்டேன். அந்தக் கெட்ட பழக்கத்திலிருந்து விடுபட அவருக்கு உதவி கிடைத்தது. கடைசியில் அந்த ஆபாச பழக்கத்தை அவர் விட்டொழித்தார். ஆபாசத்ததைப் பார்ப்பதால் வரும் மற்ற மோசமான பிரச்சினைகளைத் தவிர்க்கவும் இது அவருக்கு உதவியது.

மோசமான பிரச்சினைகளைத் தவிர்க்க நம்முடைய பைபிள் நடைமுறையான ஆலோசனைகளைத் தருகிறது என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. ஆனால் ஏற்கெனவே வேர்விட்டிருக்கும் பிரச்சினைகளைப் பற்றி என்ன சொல்லலாம்? அவற்றைச் சரிசெய்ய பைபிள் எப்படி உதவுகிறது என்று இப்போது பார்க்கலாம். **பிரச்சினைகளைச் சரிசெய்ய உதவி:** நம் வாழ்க்கையில் சில பிரச்சினைகள் சில காலத்துக்கு இருக்கும் சில சமயங்களில் பல வருஷங்களுக்கு நீடிக்கும். அந்தப் பிரச்சினைகளைப் பற்றி நாம் தெரிந்துகொள்வதற்கு முன்பே அவை ஆழமாக வேர்விட ஆரம்பித்துவிடலாம். இப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சரிசெய்ய பைபிள் உதவி செய்கிறதா? சில உதாரணங்களைக் கவனியுங்கள்.

## அளவுக்கு அதிமாகக் கவலைப்படுவது:

**"சில விஷயங்களைப்பத்தி நான் அளவுக்கு அதிகமா கற்பனை செய்வேன். ஆனா உண்மையிலேயே அது ஒண்ணும் அவ்வளவு பெருசா இருக்காது"** என்று ஒரு பெண் கூறினாள். ஆனால் மத்தேயு 6:34 அவளுக்கு உதவியது. **"நாளைக்காக ஒருபோதும் கவலைப்படாதீர்கள். நாளைக்கு அதனதன் பாடுகள் போதும்"** என்ற இந்த வசனம் அவளை

பெலப்படுத்தியது. நாளைக்கு என்ன நடக்கும் என்பதைப் பற்றி கவலைப்படுவதை நிறுத்த இயேசு சொன்ன வார்த்தைகள் தனக்கு உதவியதாக அவள் சொல்கிறாள். **"எனக்கு பிரச்சினைகள்** இருக்கத்தான் செஞ்சது. ஆனா, "நடக்காத விஷயங்களைபத்தி தேவையில்லாம கற்பனை பண்ணிவிட்டு அத பத்தி அளவுக்கு அதிகமா யோசிக்கிறதை"நிறுத்தினேன். என்று அவள் சொல்கிறாள்.

தான் அளவுக்கு அதிகமாகக் கவலைப்படுவதாக மற்றொரு பெண் உணர்ந்தாள். "ஒரு வாரத்துல, நான் பல நாட்கள் அழுவேன். சில சமயம், ராத்திரியில் எனக்கு துாக்கமே வராது. எதிர்மறையான எண்ணங்கள் என்னை சாகடிச்சுக்கிட்டே இருக்கும்" என்று அவள் சொல்கிறாள். ஆனால், 1 பேதுரு 5:7-ல் சொல்லப்பட்டிருக்கிற விஷயம் அவளுக்கு உதவியது. "[கர்த்தர்] உங்கள் மேல் அக்கறையாக இருக்கிறார். அதனால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் போட்டுவிடுங்கள்" என்று இது சொல்கிறது. "நாட்கள் செல்ல செல்ல, நான் தொடர்ந்து கர்த்தர்கிட்ட ஜெபம் செஞ்சுக்கிட்டே இருந்தேன். அவர் என்னோட ஜெபங்கள் கேட்டார். என் தோள்ல இருந்து பெரிய சுமைய இறக்கி வைச்ச மாதிரி இருந்துச்சு. அப்பப்போ, எதிர் மறையான எண்ணங்கள் திரும்ப திரும்ப வந்துாலும், இப்போ அதை எப்படி சமாளிக்கணும்னு எனக்கு தெரியும்" என்று அவள் சொல்கிறாள்.

## வேலைகளைத் தள்ளிப்போடுவது:

மற்றொரு வித்தியாசமான அனுபவம் உள்ள ஒரு இளம் பெண் இப்படிச் சொல்கிறாள்: "வேலைய தள்ளிப்போடுறது வழிவழியா வர்றதுனு நினைக்குறேன். ஏன்னா, என்னோட அப்பாவும் அப்படித்தான் செய்வார். வெறுமென, ரிலாக்ஸ் பண்றதுக்காக இல்லன்னா டிவி பார்க்குறதுக்காக, முக்கியமான வேலைகளை தள்ளிப்போடுவேன். அப்படி செய்றது மன அழுத்தத்தை அதிகரிக்கும். அதோட, அந்த வேலைய ஒழுங்கா செய்யமுடியாமலும் போயிடும்." 2 தீமோத்தேயு 2:15-ல்,"எதற்காகவும் வெட்கப்படாத வேலையாளாக...[கர்த்தரால்] ஏற்றுக்கொள்ளப்பட்டவனாக அவருக்கு முன்னால் நிற்பதற்கு உன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்" என்று சொல்லப்பட்டிருக்கிற வேத வசன வார்த்தைகள் அவளுக்கு உதவின. "வேலைகளை தள்ளிப்போடுறதுனால கர்த்தர் முன்னாடி நான் தலைகுனிய விரும்புல" என்று அவள் சொல்கிறாள். இப்போது, அந்த பெண் நிறைய மாற்றங்களைச் செய்திருக்கிறாள். மற்றொரு பெண் இப்படிச் சொல்கிறாள்: "ஒரு ப்ராஜெக்ட் முடிக்க வேண்டியிருக்கும், ஆனா, அதை நினைச்சு அழுவேன், துாக்கமே வராது, கவலையாக இருக்கும். இது எனக்கு எந்த நன்மையயும் தரல. "நீதிமொழிகள் 13:16-ல் "சாமர்த்தியசாலி அறிவோடு நடந்துகொள்கிறான். ஆனால், முட்டாள் தன் முட்டாள்தனத்தைக் காட்டிவிடுகிறான்" என்று சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகள் அவளுக்கு உதவின. அந்த வசனத்தை ஆழமாக யோசித்துப் பார்த்தால் என்ன நன்மை கிடைத்தது என்று மற்றொரு பெண் சொல்கிறாள்: "முன்கூட்டியே திட்டமிடுறது ஞானமான விஷயம். இப்போ, நான் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி ஒரு பட்டியல் போட்டு என் மேஜை மேலயே வைச்சிருக்கேன். இது என்னோடா வேலைகளை நேரத்தோட செய்றதுக்கும், கடைசி நிமிஷம் வரைக்கும் தள்ளிப்போடாம இருக்குறதுக்கும் உதவியா இருக்கு."

## தனிமை:

"என்னோடகணவர் என்னையும் என்னோட நாலு பிள்ளைங்களயும் விட்டுட்டு போயிட்டார்" என்று ஒரு பெண் சொல்கிறார். இப்படிப்பட்ட வேதனையுள்ள அந்த பெண்ணுக்கு எந்த பைபிள் நியமம் உதவியது? நீதிமொழிகள் 17:17-ல், **"உண்மையான நண்பன் எல்லா சமயத்திலும் அன்பு காட்டுகிறான். கஷ்ட காலங்களில் உதவுவதற்காககூடப் பிறந்த சகோதரனாக அவன் இருக்கிறான்"** என்று சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகள் அவருக்கு உதவின. சபையில் இருந்தவர்களுடைய உதவியை அவள் பெற்றுக்கொண்டார். "என்னோட நண்பர்கள் எனக்கு பல வழிகளில் உதவி செஞ்சாங்க. சிலர் வீட்டுக்கு தேவையான மளிகைப் பொருள்கள் வாங்கித் தந்தாங்க, சிலர் பூக்கள் கொடுத்தாங்க. மூணு தடவை நாங்க வீட்ட மாத்த வேண்டியிருந்தப்போ, நிறைய பேர் எங்களுக்கு உதவி செஞ்சாங்க. ஒருத்தர் எனக்கு வேலை வாங்கி தந்தார். என்னோட நண்பர்கள் எப்பவும் என்கூட இருந்திருக்காங்க" என்று அவர் சொல்கிறார்.

முன்பு குறிப்பிடப்பட்ட அந்த பெண்ணும் தனிமையில் தவித்தவர்தான் அவள் உறவினர் எல்லாவற்றையும் இழந்த பிறகு, "எல்லாரும் அவங்க குடும்பத்தோடு ஒண்ணா இருந்தாங்க. நான் ம்டும் தனி மரமா இருந்தேன். ரொம்ப கவலையா இருந்தது" என்று அவர் சொல்கிறார். சங்கீதம் 68:6-ல், "தன்னந்தனியாக இருக்கிறவர்களுக்குக் குடியிருக்க வீடு தருகிறார்" என்று சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகள் அவருக்கு ஆறுதலாக இருந்தன. அவர் என்ன சொல்கிறார் என்று கவனியுங்கள்: "குடியிருக்குறதுக்கு வெறுமென வீடு மட்டும்இல்ல, தன்னை நேசிக்கிறவங்களுக்கு உண்மையான சொந்த பந்தங்களையும் கர்த்தர் தர்றார்னு இந்த வசனத்துல இருந்து புரிஞ்சுக்கிட்டேன். ஆனா, கர்த்தர்கிட்ட நெருங்கி போகலன்னா மத்தவங்ககிட்ட நெருங்கி போக முடியாதுனு எனக்கு தெரியும். அதுக்கு, சங்கீதம் 37:4 எனக்கு உதவியா இருந்தது. கர்த்தரை வணங்குவதில் அளவில்லாமல் சந்தோஷப்படு. அப்போது, உன் இதயத்திலுள்ள ஆசைகளை அவர் நிறைவேற்றி வைப்பார்னு அந்த வசனம் சொல்லுது.

அவர் இப்படிச் சொல்லி முடிக்கிறார்: "நான் கர்த்தரிடம் இன்னும் அதிகமா நெருங்கி போகணும்னு உணர்ந்தேன். கர்த்தர் மிகச் சிறந்த நண்பரா இருக்க முடியும். பிறகு, கர்த்தரை நேசிக்கிறவங்களோடு நட்பை வளர்த்துக்கு நான் என்னெல்லாம் செய்யலாம்னு ஒரு பட்டியல் போட்டேன். மத்தவங்ககிட்ட இருக்குற நல்ல குணங்கள பார்க்க கத்துக்கிட்டேன். அவங்க செய்ற சின்ன சின்ன தவறுகள பெருசுபடுத்தாம இருக்கவும் கத்துக்கிட்டேன்."

கடவுள் வணங்குகிறவர்களும் தவறு செய்யும் இயல்புள்ளவர்கள்தான். மற்றவர்களைப் போலவே கர்த்தரின் சாட்சிகளும் கஷ்டப்படுகிறார்கள். ஆனால், முடிந்த போதெல்லாம் மற்றவர்களுக்கு உதவி செய்ய பைபிள் அவர்களுக்குப் பயிற்சி தருகிறது. இப்படிப்பட்ட நல்ல நண்பர்களைக் கண்டுபிடிப்பது ஞானமான விஷயம். ஆனால் தீராத வியாதி, மனவேதனை போன்ற தீர்க்க முடியாத பிரச்சினைகளும் இன்று இருக்கின்றன. **அவற்றைச் சார்ந்திருக்க பைபிள் நியமங்கள் உங்களுக்கு உதவுமா?**

## பிரச்சினைகளைச் சகிக்க உதவி:

இன்று சில பிரச்சினைகளை நம்மால் தவிர்க்கவும் முடியாது. சரிசெய்யவும் முடியாது. உதாரணத்துக்கு,உங்கள் அன்பானவர் ஒருவரை நீங்கள் மரணத்தில் இழந்திருக்கலாம். அல்லது தீராத வியாதியால் நீங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கலாம். இப்போது, உங்கள் வலியையும் வேதனையையும் சகித்திருப்பது தான் நல்லது. இதற்கு பைபிள் உதவுமா?.நீங்கள் மனவேதனையில் தவித்ததுக் கொண்டிருந்தாலும், பைபிள் உங்களுக்கு நிச்சயம் உதவும்:

## தீராத வியாதி:

**"மரபணு கோளாறுனால எனக்கு எப்பவும் தாங்க முடியாத வலி இருக்கும். அதனால, என்னோட வாழ்க்கையே தலைகீழாமாறிடுச்சு"** என்று ஒரு பெண் சொல்கிறாள். பைபிளைப் படிக்கவும். மற்ற ஆன்மீக விஷயங்களில் ஈடுபடவும் கவனம் செலுத்த முடியவில்லை என்பதுதான் அவளுக்கு ரொம்ப கவலையாக இருந்தது. ஆனால், **"கடவுளால் எல்லாமே செய்ய முடியும்"** என்று மத்தேயு 19:26-ல் இருக்கிற இயேசுவின் வார்த்தைகள் அவளுக்கு ரொம்பவே ஆறுதலாக இருந்தன. படிப்பதற்கு வேறொரு வழியும் இருக்கிறது என்பதை அந்த பெண் புரிந்துக்கொண்டாள். அவளுக்கு இருந்த வலியால், சில சமயங்களில், அவளால் பைபிளை வாசிக்க முடியவில்லலை. அதனால், பைபிள் மற்றும் பைபிள் பிரசுரங்களின் ஆடியோ பதிவுகளை அவள் கேட்க ஆரம்பித்தாள். **"இதெல்லாம் இல்லாம, என்னால கடவுள்கிட்ட நெருங்கி போயிருக்கவே முடியாது"** என்று அவள் சொல்கிறாள். முன்பு செய்த விஷயங்களை இப்போது செய்ய முடியவில்லலையே என்று கவலைப்படும்போதெல்லாம், 2 கொரிந்தியர் 8:12-ல் இருக்கிற வார்த்தைகள் அவளுக்கு ஆறுதலாக இருந்தன. **"கொடுக்க வேண்டும் என்ற ஆர்வம் ஒருவனுக்கு இருந்தால், அவன் தன்னிடம் இருப்பதற்கு ஏற்றபடி எதைக் கொடுத்தாலும் அதைக் கடவுள் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார். இல்லாததைக் கொடுக்க வேண்டும்** என்று கர்த்தர் எதிர்பார்ப்பதில்லை" என்று இது சொல்கிறது. தன்னால் செய்ய முடிந்த விஷயங்களை நினைத்து கடவுள் சந்தோஷப்படுகிறார் என்பது அவளுக்கு ஆறுதலாக இருக்கிறது. ஏனென்றால், தன்னுடைய குறைபாட்டின் மத்தியலும் தன்னால் முடிந்த எல்லாவற்றையும் அவள் செய்கிறாள்.

## மனவேதனை:

முன்பு குறிப்பிடப்பட்ட அந்த பெண் இப்படிச் சொல்கிறார்: **"என்னோட 18 வயசு மகள் இறந்ததுக்கு அப்புறம், எனக்கு ரொம்ப வேதனையா இருந்துச்சு. என்னால வாழவே முடியாதனு தோணுச்சு. எதுவுமே பழையபடி இருக்காதுனு நினைச்சேன்." ஆனால், சங்கீதம் 94:19-ல் இருக்கிற வார்த்தைகள் அவருக்கு ஆறுதலாக இருந்தன. "கவலைகள் என்னைத் திணறடித்தபோது, நீரே எனக்கு ஆறுதல் தந்து, என் இதயத்துக்கு இதமளித்தீர்கள்"** என்று சங்கீதக்காரன் கடவுளிடம் சொன்னார். **"என்னோட வலியயும் வேதனையயும் சமாளிக்க எனக்கு உதவி செய்யுங்கனு கர்த்தர்கிட்ட கெஞ்சினேன்"** என்று அந்த பெண் சொல்கிறாள்.

வாலண்டியர் வேலை செய்வதில் அவர் தன்னை பிஸியாக வைத்துக்கொண்டார். பிள்ளைகள் கலர் அடிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல, தான் உள்ளத்தில் உடைந்துபோயிருந்தாலும், தன்னாலும் மற்றவர்களுக்கு உதவமுடியும் என்பதை அவர் கற்றுக்கொண்டார். "பைபிளை பயன்படுத்தி நான் மத்தவங்களுக்கு ஆறுதல் சொல்றப்போ, கர்த்தர் என்னை ஆறுதல்படுத்துறாருனு தெரிஞ்சுக்கிட்டேன்" என்று அவர் சொல்கிறார். ரொம்ப காலமாகத் துக்கத்தில் மூழ்கியிருந்த சில பைபிள் கதாபாத்திரங்களைப் பற்றி அவர் படித்தார். அவர்கள் ஒவ்வொருவரும் நன்றாக ஜெபம் செய்திருக்கிறார்கள் என்பதை அவர் தெரிந்துக்கொண்டார். "பைபிளை மூடி வைச்சிருந்தா நமக்கு எந்த பதிலும் கிடைக்காது" என்பதையும் அவர் தெரிந்து கொண்டார்.

பைபிளைப் படிப்பது அந்த பெண்ணுக்கு வேறொரு விஷயத்தையும் கற்றுக் கொடுத்திருக்கிறது. அதாவது, கடந்த காலத்தைப் பற்றி யோசிக்காமல், எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க அவருக்குச் கற்றுக்கொடுத்திருக்கிறது. **"நீதிமான்களும் அநீதிமான்களும் உயிரோடு** எழுப்பப்படுவார்கள்" என்று **அப்போஸ்தலர் 24:15-ல்** கொடுக்கப்பட்டிருக்கிற நம்பிக்கை அவருக்கு ஆறுதலாக இருக்கிறது. தன்னுடைய மகளை கர்த்தர் உயிரோடு கொண்டுவருவார் என்பதில் அந் பெண் எந்தளவு உறுதியாக இருக்கிறார்? அதைப் பற்றி அவர் என்ன சொல்கிறார் என்று கவனியுங்கள்:

"எதிர்காலத்துல நான் என்னோட மகள பார்ப்பேன். என் மகள் நான் பார்க்கப்போற அந்த நாளை கர்த்தர் ஏற்கெனவே குறிச்சுட்டார். நானும் என்னோட மகளும் ஒரு தோட்டத்துல இருக்கோம். அவ பிறந்த அன்னைக்கு அவள் ரொம்ப நேசிச்சேன்: அதே மாதிரி இப்பவும் அவள நேசிக்குறேன்." **குறிப்பு:** மகளும் மனந்திரும்பி இயேசுவின் இரத்ததால் கழுவப்பட்டிருந்தால் இந்த சம்பவத்தை விளக்குகிற அந்த பெண்ணும் இரட்சிக்கப்பட்டிருந்தால் மட்டுமே பரதேசியில் ஒன்றாக சந்திக்கமுடியும். இதில் ஒருவர் மனந்திரும்பாமல் மரித்துப்போனாலும் ஐசுவரியவான் பாதாளத்திலும்-லாசரும் பரதேசியிலும் கொண்டுபோகப்பட்ட நிலையில்தான் காணப்படுவார்கள்.

## பைபிளும் உங்கள் எதிர்காலமும்:

ஒரு சாயங்காலம் ஓர் இருட்டான பாதையில் நீங்கள் நடந்து போகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். சூரியன் மறைந்து வெகு நேரம் ஆகியிருந்தாலும், நீங்கள் வழிதவறி போவதுபோல் உணர மாட்டிர்கள். ஏனென்றால், உங்கள் கையில் அதிக ஒளி தரும் ஒரு டார்ச் லைட் இருக்கிறது. அதைக் கீழ் நோக்கி உங்கள் பாதையில் காட்டும்போது, அதனுடைய ஒளி வெகு துாரம்வரை உங்கள் பாதைக்கு வெளிச்சம் தருகிறது. பைபிளும் சில விதங்களில் ஒரு டார்ச் லைட்டைப் போலவே இருக்கிறது. **கடவுளுடைய வார்த்தை**, நம் கண் முன்னால் இருக்கிற பிரச்சினைகளைச் சமாளிக்க, அதாவது நம் தினசரி பிரச்சினைகளைச் சமாளிக்க, உதவும். அதோடு, நம் எதிர்காலத்தைத் தெளிவாகப் பார்க்கவும், அதாவது நிரந்தர சந்தோஷத்துக்கும் திருப்திக்கும் வழிநடத்துகிற பாதையைத் தெளிவாகப் பார்க்கவும், அதில் நடக்கவும், நமக்கு உதவும். (சங்கீதம் 119:105) எப்படி?.

இரண்டு விதங்களில் பைபிள் நமக்கு எதிர்கால நம்பிக்கையைத் தருகிறது:

1 **நம் வாழ்க்கையின் அர்த்தைக்** கண்டுபிடிக்க பைபிள் உதவுகிறது.

2 நம்மை படைத்த தெய்வத்தோடு **என்றென்றும்** நண்பராக இருப்பது எப்படி என்பதை பைபிள் கற்றுத்தருகிறது.

நம் எல்லாருடைய வாழ்க்கைக்கும் ஓர் அர்த்தம் இருக்கிறது: நம் பிரச்சினைகளைச் சமாளிக்க பைபிள் நம்பகரமான ஆலோசனைகளைத் தருகிறது. ஒரு சுயஉதவி(கைட்) புத்தகத்தைவிட பைபிள் மதிப்புள்ளது. ஏனென்றால், நம்முடைய ஆசைகளுக்கு மட்டுமே கவனம் செலுத்தாமல், அவற்றைவிட முக்கியமான ஒரு விஷயத்தைப் பார்க்கும்போதுதான், நம் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் கிடைக்கிறது.

உதாரணத்துக்கு, **"வாங்குவதைவிட கொடுப்பதில்தான் அதிக சந்தோஷம் இருக்கிறது"** என்ற பைபிள் ஆலோசனையை எடுத்துக்கொள்ளுங்கள். (அப்போஸ்தலர் 20:35) பண உதவி தேவைப்பட்ட ஒருவருக்கு நீங்கள் உதவி செய்தது உங்கள் ஞாபகத்துக்கு வருகிறதா? அல்லது ஒரு நண்பர் அவருடைய இதயத்தில் இருந்த எல்லாவற்றையும் உங்களிடம் கொட்டியபோது நீங்கள் காதுகொடுத்து கேட்டது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? ஒருவருக்கு உதவி செய்த திருப்தி உங்கள் மனதுக்கு இதமாக இருந்திருக்கும், இல்லையா? எதையும் எதிர்பார்க்காமல் கொடுக்கும்போது நமக்கு அளவில்லாத சந்தோஷம் கிடைக்கும். "**எந்தப் பலனையும் எதிா பார்க்காமல் ஒருவருக்கு உதவி செய்யும்போது,** நீங்கள் செய்ததைவிட உங்களுக்கு அதிகமாகத் திருப்பி கிடைக்கும்" என்று வேதமும் போதிக்கிறது. நாம் ஒருவருக்கு உதவி செய்யும்போது, அதுவும் அவரால் அந்த பணத்தை திருப்பித்தர முடியாத ஒருவருக்கு உதவி செய்யும்போது, நமக்கு **நிச்சயம்** பலன் கிடைகக்கும். அப்போது, ஒரு முக்கியமான விஷயத்தின் பாகமாக நாம் ஆவோம். சொல்லப்போனால், நம் படைப்பாளரோடு சோர்ந்து நாம் வேலை செய்வோம். நாம் செய்யும் கருணை மிக்க செயல்களை கர்த்தர் அதை தனக்குக் கொடுக்கப்பட்ட கடனாக நினைக்கிறார். (நீதிமொழிகள் 19:17) நாம் ஏழைகளுக்குச் செய்யும் உதவியை அவர் பெரிதாக மதிக்கிறார். பூஞ்சோலை போன்ற பூமியில் என்றென்றும் வாழும் நம் வாழ்க்கையையே தருவதன் மூலம் அவர் அந்தக் கடனை நமக்கே திருப்பித்தரப்போவதாக வாக்கு கொடுக்கிறார். இது எப்பேர்பட்ட எதிர்கால நம்பிக்கை!-சங்கீதம் 37:29; லூக்கா 14:12-14.

எல்லாவற்றையும்விட, உண்மை தெய்வமான கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை வணங்குவதன் மூலம் நம் வாழ்க்கைக்கான அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முடியும் என்று பைபிள் சொல்கிறது. கடவுளுக்குப் புகழையும், மாண்பையும், கீழ்ப்படிதலையும் தரும்படி அவருடைய வார்த்தை நம்மை உற்சாகப்படுத்துகிறது. ஏனென்றால், இதையெல்லாம் பெற்றுக்கொள்வதற்கு அவரே தகுதியானவர்!(பிரசங்கி 12:13; வெளிப்படுத்துதல் 4:11) இப்படிச் செய்யும்போது, நம்முடைய படைப்பாளரை நம்மால் சந்தோஷப்படுத்தமுடியும். இது எவ்வளவு பெரிய விஷயம்! "ஞானமாக நடந்து என் இதயத்தை சந்தோஷப்படுத்து" என்று அவரே நம்மிடம் கேட்கிறார்.

(நீதி மொழிகள் 27:11) பைபிளில் சொல்லியிருக்கிற ஆலோசனைகளின்படி நாம் தீர்மானங்கள் எடுக்கும்போது, நம் அன்புத் தந்தையான கர்த்தரின் இதயத்தை நம்மால் சந்தோஷப்படுத்த முடியும். ஏனென்றால், அவர் நம்மேல் அக்கறையாக இருக்கிறார். அவருடைய ஆலோசனைகளின்படி நடப்பதன் மூலம் நாம் நன்மையடைய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். (ஏசாயா 48:17, 18) நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை வணங்குவதைவிட... அவருடைய இதயத்தைச் **சந்தோஷப்படுத்தும் விதத்தில் வாழ்வதைவிட... நம் வாழ்க்கைக்கு வேறு என்ன அர்த்தம்** இருக்க முடியும்?

## நம் படைப்பாளருடைய நண்பராக இருக்க முடியும்:

நம் கர்த்தரோடு நட்பு வைத்துக்கொள்ளும்படி பைபிள் நம்மை உற்சாகப்படுத்துகிறது. "கர்த்தரிடம் நெருங்கி வாருங்கள், அப்போது அவர் உங்களிடம் நெருங்கி வருவார்" என்று அது சொல்கிறது. (யாக்கோபு 4:8) உண்மையிலேயே, சர்வசக்தியுள்ள கர்த்தருடைய நண்பர்களாக நம்மால் ஆக முடியுமா என்று நாம் ஒருவேளை யோசிக்கலாம்.

**ஆனால், நாம் "அவரைத் தேடினால்"** அவரை நிச்சயம் கண்டுபிடிக்க முடியும். ஏனென்றால், **"அவர் நம் ஒருவருக்கும் தூரமானவராக"** இல்லை என்று பைபிள் சொல்கிறது. **(அப்போஸ்தலர் 17:27)** கடவுளுடைய நண்பராவதற்கு முயங்சி செய்யுங்கள் என்று பைபிள் சொல்லும் ஆலோசனை நம் எதிர்காலத்துக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். எப்படி?.

ஆபிரகாம் கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து தன் ஒரே மகனை பலி செலுத்த துணிந்தபோது ஆபிரகாம் கர்த்தரின் சிநேகிதன் என்று அழைக்கப்பட்டான். யாக் 2:21-24. நாம் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், நாமாகவே நம்முடைய எதிரியான மரணத்திடமிருந்து தப்பிக்க முடியாது. **(1 கொரிந்தியர் 15:26)** ஆனால், கர்த்தர் என்றென்றும் வாழ்கிறவர். அவருக்கு மரணம் என்பதே கிடையாது. தன்னுடைய நண்பர்களும் மரணமே இல்லாமல் என்றென்றும் வாழ வேண்டும் என்று அவர் ஆசைப்படுகிறார். தன்னைத் தேடுகிறவர்களுக்கு கர்த்தர் என்ன கொடுக்க விரும்புகிறார்? நாம் **"என்றென்றும் வாழ்க்கையை சந்தோஷமாக அனுபவித்து மகிழ வேண்டும்"** என்று அவர் விரும்புகிறார்-**சங்கீதம் 22:26.**

கடவுளோடு அப்படிப்பட்ட நிலையான நட்பை நீங்கள் எப்படி வளர்த்துக்கொள்ளலாம்? அதற்கு, அவருடைய வார்த்தையான பைபிளைப் படித்து, அவரைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். **(யோவான் 17:3 2 தீமோத்தேயு 3:16)** பைபிளைப் புரிந்துகொள்ள அவரிடம் உதவி கேளுங்கள். ஏனென்றால், ஞானத்துகாக **"கடவுளிடம் கேட்டுக்கொண்டேயிருந்தால்"** அவர் அதை நிச்சயம் தருவார் என்று பைபிள் வாக்குக் கொடுக்கிறது. **(யாக்கோகு 1:5)** பிறகு, கற்றுக்கொண்ட விஷயங்களை வாழ்க்கையில் கடைப்பிடியுங்கள்.

அப்போது, கடவுளுடைய வார்த்தை **"(உங்கள்) கால்களுக்கு விளக்காகவும், (உங்கள்)பாதைக்கு வெளிச்சமாகவும்". இருக்கும்!-**சங்கீதம் 119:105. ❖❖❖❖❖❖



# கள்ள தீர்க்கதரிசிகளுக்குள் சகோ.அகஸ்டின் ஜெபக்குமாரா?

**மனவேதனையுடன்** எழுதுகிறேன். **மிஷனரி தலைவர்களைப்பற்றியும், மிஷனரி ஸ்தாபனங்களில் உள்ள ஊழல்களைப்பற்றியும்** எப்போது எழுதினாலும் நான் மிக **ஜாக்கிறதையுடனும், பயத்துடனும்** எழுதுவேன் அதனால்தான் இப்போது எழுதும் இந்த செய்தியும், விமர்சனமும் பலகாலம் கழித்து தாமதமாக எழுதுகிறேன். ஏற்கனவே பல கள்ளதீர்க்கதரிசகள் ஜெபத்தில் பெயர் அழைக்கும் பொய் தீர்க்கதரிசனத்தையும், **அந்நியபாஷை** என்ற பெயரில் பொய்யான பாஷையில் உளரி மாதம் ஒரு தீர்க்கதரிசனம் வருடாவருடம் **புது தீர்க்கதரிசனம்** என்று கூறி மக்களை ஏமாற்றி கொண்டிருப்பதை வாசகர்கள் அறிவீர்கள். தமிழகம் இந்த வருடம் செழிக்கும். தமிழ்நாட்டு பிரச்சனைகள் தீரும் என்று வருடத்தின் ஆரம்பத்தில் நாலுமாவடியில் சகோ.மோகன் சி.லாசரஸ் தீர்க்கதரிசனம் கூறியவுடன்தான் தமிழ்நாட்டில் வன்முறைகள்,போராட்டங்கள் பிரச்சனைகளின் எண்ணிக்கை தீவிரமடைந்தது.

தஞ்சாவூரில் காவிரி தண்ணீர் வராததால் என்றுமில்லாத **வறட்சி,நெல் விளைச்சல் நின்று** போனாது. விவசாய நிலம் வெடித்து விவசாயிகள் எலிகளை பிடித்து சாப்பிடும் நிலை வந்தது. தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் போராட்டம் விவசாயிகள் இந்தியாவின் தலைநகரம் சென்று பார்லிமென்ட்முன் அரை நிர்வாணத்தோடு பிரதமரிடம் மனுகொடுக்க விவசாயிகள் படையெடுத்தனர். பிரதமர் அவர்களை சந்திக்க மறுத்தார். அதனால் பல விவசாயிகள் முழு நிர்வாணத்தோடு பார்லிமென்ட் முன் உருண்டு தங்கள் விளை நிலம் காவிரி நீர் இல்லாமல் வரண்டுப்போனவதை அறிவித்தனர். ஆனால் பிரதமர் மௌனம் காத்தார். தன் நாட்டு மக்களின் வறுமை குரலை அலட்சியம் செய்தார். பிரதமருக்கு கர்நாடகா மாநிலத்தில் எப்படியாவது தன் இந்துமத தீவிரவாதிகளின் கட்சி வெற்றிபெறவேண்டும். அதனால் தேர்தல் முடியும் வரை **தமிழ்நாட்டு தண்ணீர்பிரச்சனையை** தீர்க்கமாட்டார். இப்படியாக தண்ணீர் பிரச்சனை தமிழ்நாட்டில் தீர்ந்தபாடில்லை. இந்த லட்சனத்தில் **தமிழ்நாடு செழிக்கும்** என்ற தீர்க்கதரிசனம் பொய்யானதாகும்.

**சகோ.மோகன் சி.லாசரஸ்ஸின்** தீர்க்கதரிசனம் தன் பொய் நிலையை வெளிப்படுத்தியது. தமிழகம் முழுவதும் லஞ்சம் பெருகியது. தமிழ்நாட்டு மந்திரிகள் யாவரும் பிரதமர் மோடியின் அடிமையானவர்களானர்கள். தமிழ்நாட்டில் கிறிஸ்தவ சபைகள் பல்வேறு இடங்களில் அடித்து நெருக்கப்பட்டது. சபை பாஸ்டர்கள் தாக்கப்பட்டனர். அனைத்து சபை பிஷப்மார்கள் கூட்டாக பிரதமருக்கு புகார் அனுப்பினார்கள். வழக்கம்போல **மௌனம் பிரதமரின்** பதிலாக அமைந்தது. சகோ.மோகன் சி.லாசரஸ் தமிழகம் எங்கும் செழிப்பு என்ற தீர்க்கதரிசனம் எத்தனை பொய்யானது என்று பலருக்கு விளங்கியது. இப்படிப்பட்ட பொய் தீர்க்கதரிசனங்களைக்குறித்து பல ஊழியர்கள் தங்கள் பிரசங்கத்தில் வெளிப்படையாக விமர்ச்சித்தனர். அதில் ஒருவர் **GEMS - ஜெம்ஸ்** என்ற மிஷனரி ஸ்தாபனத்தின் ஸ்தாபகரும் பிரபல மேடை பிரசங்கியாருமான **சகோ.அகஸ்டின் ஜெபக்குமார்** அவர்களுமாவார்.

அவர் தன் பிரசங்கத்தில் பல **ஊழியர்களின் ஊழல்களை பிஷப்மார்களையும், ஆயர்களையும், சபை பாஸ்டர்களின்** தவறான உபதேசங்களை தவறு என்று சுட்டிக்காட்டி ஆக்ரோஷமாக தயவுதாட்சன்யம் பாராமல் வெகுவாக கண்டித்து பேசுவார். எல்லா சபைகளும் அவரை கூட்டத்தில் பேச அழைப்பதற்கு தயங்கினாலும் அவரையும் அவர் வடஇந்தியாவில் நடத்தும் மிஷனரி பணியும் **சமூக பணியும், மருத்துவப் பணியும்** அறிந்து தனிப்பட்டமுறையில் சபை மக்கள் அவர்களுக்கு பொதுகூட்ட ஏற்பாடுகளை செய்தார்கள். அந்த ஏற்பாடு அனைத்து சபைகளுக்கும் பிரயோஜனமாக இருந்தது. இந்தியாவில் தமிழ்நாட்டில் அவருக்கு நல்ல வரவேற்பு உண்டானது. திருநெல்வேலி நபர்கள் பலர் அவருக்கும், அவர் ஊழியத்துக்கும் பணம் அள்ளி கொடுத்தார்கள். **கனடா,ஐரோப்பிய,சிங்கப்பூர்** ஆகிய நாடுகளில் பலர் அவரை அழைத்து கூட்டங்கள் நடத்தி ஏராளமான பணம் உதவி செய்து உதவினார்கள்.ஆனால் திடீர் என்று அவர் ஊழியத்தில் ஒரு மாற்றம் உண்டானது. ஊழியத்தின் அழைப்பின் வழிமாற ஆரம்பிப்தை அவர் பிரசங்கம் உணர்த்தியது. எந்த பொய் தீர்க்கதரிசனங்களை வன்மையாக கண்டித்து பேசினாரோ அதே பொய் தீர்க்கதரிசனத்தை இவரும் பின்பற்ற ஆரம்பித்தார்.

தீர்க்கதரிசனங்கள் கூறாமல் அற்புத ஊழியங்கள் எதுவும் செய்யாமலே **சகோ.அகஸ்டின் ஜெபகுமாருக்கு** என்று ஒரு பெரும்கூட்டம் அனைத்து தமிழகத்திலும் கூடியது. நானும் என் பிரசங்கத்திலும் தனிப்பட்ட முறையிலும் அவரின் மிஷனரி ஊழியங்களை அதோடு இணைந்த **சமூக சேவைகளையும், பீகார்** மாநிலத்தில் அவர் செய்யும் **கல்வி தொண்டையும் பாராட்டி என்** ஜாமக்காரனில் எழுதினேன். அவர் என் நண்பர் அல்ல. மேலும் அவர் என்னை வெகுவாக வெறுப்பவர் என்பதையும் நான் நன்றாக அறிவேன். ஆனால் அவரின் மிஷனரி பணியையும் அதற்காக அவர் பட்டபாடுகளையும் மிக நன்றாக நான் அறிந்ததாலும் **பண விஷயத்தில்** அவர் உண்மை உள்ளவர், வாழ்க்கையில் எளிமையை பின்பற்றுகிறவர் என்பதாலும் நான் அவரை ஆதரித்தேன். மற்றவர்களுக்கும் அவரை அறிமுகப்படுத்தினேன்.

## ஆனால் அகஸ்டின் ஜெபகுமார் அவர்களில் ஏற்றப்பட்ட திடீர் மாற்றம்:

சிறப்பாக மிஷனரி ஊழியம் செய்துவந்த சகோ.அகஸ்டின்ஜெபகுமார் திடீர் என்று **தீர்க்கதரிசனம்** கூற ஆரம்பித்தது. அதிர்ச்சியை அளித்தது. ஆரம்பத்திலிருந்து சகோ.**அகஸ்டின் ஜெபகுமார்** தன் சபையின் பெந்தேகோஸ்தே அனுபவமாகிய **அந்நியபாஷையை** அவ்வப்போது பேசுகிறதை கேள்விப்பட்டேன். பொய்யான **அந்நியபாஷை உபதேசத்தை** தன் உள்ளத்தின் ஆழத்தில் புதைத்து வைத்து சிஎஸ்ஐ சபை மக்களை கவர வெளியரங்கமாக பாஷை பேசாமல் மறைத்தார். ஆனால் பெந்தேகோஸ்தே சபையினர் இவரை அழைத்து கூட்டம் நடத்தும்போது வெளிப்படையாக **அந்நியபாஷை** பேசினார். தவறை கண்டித்து பேசும் அவரின் சிறப்பான பிரசங்க ஊழியத்தில் என்றைக்காவது ஒரு நாள் இவரின் மற்றொரு முகம் வெளிப்படத்தான் போகிறது என்று நான் எதிர்ப்பார்த்தேன். கடந்த சில வருடங்களாக நான் எதிர்ப்பார்த்த ஊழிய பிறழ்ச்சி மெல்லமெல்ல அவர் ஊழியத்தில் காணப்பட்டது. **பாரிஸில்(Paris)** உள்ள உலக பிரசித்தி பெற்ற மிக உயர்ந்த **ஈபில் டவர் கோபுரம் சரிந்து விழப்போகிறது,** கர்த்தர் அதை சொன்னார் என்று **தீர்க்கதரிசனம்** கூறியதை பாரீஸ் நாட்டு சபை மக்கள் என்னிடம் கூற கேட்டேன்.

கொஞ்சகொஞ்சமாக சில தீர்க்கதரிசனங்களை வெவ்வேறு இடங்களில் இவர் பேசியதாக கேள்விப்பட்டேன். அந்த சூழ்நிலையின் உச்சக்கட்டமாக அரபுதேசங்களில் ஒன்றான **ஈரான்** நாடு **இஸ்ரவேல்** நாட்டின்மேல் குண்டுமழை பொழியபோகிறது. **இது எந்த மாதம், எந்த தேதிக்குள்** நடைபெறும் என்பதையும் இவர் அறிவித்ததோடு ஒரு பெரும் சவால்விட்டார். குறிப்பிட்ட மாதம் 4ம்தேதிக்குமேல் **நான் உயிரோடு இருப்பேன்,நீங்களும் உயிரோடு யிருப்பீர்கள். இந்த தீர்க்கதரிசனம் நடைபெறவிட்டால் என்னை நேரிடையாக நீங்கள் கண்டிக்கலாம்** என்றார். இப்படி சவால்விட்டு அவர் எந்த விஷயத்திலும் தன் பிரசங்கத்தில் இப்படி கடுமையாக இவர் பேசியதேயில்லை. சகோ.அகஸ்டின் ஜெபகுமார் அவர்கள் தீர்க்கதரிசனம் கூறி பல மாதங்கள் ஆகிவிட்டது. அவர் கூறின ஒரு தீர்க்கதரிசனமும் இதுவரை நடக்கவேயில்லை.

நான் சென்று வந்த நாடுகளில் சில இடத்தில் **சகோ.அகஸ்டின் ஜெபகுமார்** அவர்களின் விசிறிகள் உண்டு. நான் சென்ற நாடுகளில், இந்தியாவில் சில மாவட்டங்களில் அவர் ஊழியத்தை தாங்குகிறவர்கள் என் பத்திரிக்கையான ஜாமக்காரனையும் என் ஊழியத்தையும் தாங்குகிறார்கள். அவர்கள் யாவரும் **பெரும் மனவேதனையுடன்** அவர் கூறிய பல **தீர்க்கதரிசனங்கள்** அடங்கிய **சிடியையும், Youtube**ல் வந்த அவர் பிரசங்கங்களையும் எனக்கு போட்டு காட்டி மிகவும் வருந்தினார்கள். இவ்வளவு **பிரசங்க தாலந்து பெற்றவர்.** எப்படி மோகன் சி.லாசரஸ் கூறியபடி **தமிழகம் செழிக்கும்,எயிட்ஸ் வியாதி,சர்க்கரை வியாதியை இயேசு மேடையிலிருந்து** இறங்கி சுகப்படுத்துகிறதை **நான் பார்க்கிறேன்** என்று மிகத் தெளிவாக இயேசுவின் நாமத்தில் பகிரங்கமாக பொய் பேசியதைப்போல சகோ.**அகஸ்டின்ஜெபகுமார்** அவர்களும் கள்ள தீர்க்கதரிசிகள் வரிசையில் சேர்ந்துவிட்டாரே? இவருடைய ஊழியத்துக்கு பணஉதவி செய்தவர்களில் சிலர் **பயந்து பயந்து** இவரிடம் கூறிய தீர்க்கதரிசனங்கள் யாவும் பொய்த்துபோனது ஏன்? கர்த்தர் சகோ.மோகன் சி.லாசரஸ்ஸிடம் பேசியதாக வருடத்திற்கு ஒரு தீர்க்கதரிசனம் **ஒன்று வீதம்** பல வருடங்கள் தொடர்ந்து பேசிய பொய்களைப்போல உங்களிடமும் கர்த்தர் இப்படி **பொய் பேசுவாரா** என்று கேட்க தோன்றியது. **என் மனைவிதான்** என்னை அப்படி அவரிடம் பேசவேண்டாம் என்று தடுத்தார் என்று கூறினார்கள். ஆனால் நாடேபேசும் அந்த குற்றச்சாட்டுக்கு அதாவது உங்கள் **பிழையான தீர்க்கதரிசனதுக்கு** உங்கள் பதில் என்ன? என்று கேட்டாராம். அவர் பதில் ஏதும் பேசவில்லை. இதேபோல் பலர் கடிதம்மூலம் சகோ.அகஸ்டின் ஜெபகுமாருக்கு கடிதம் எழுதி கேட்டிருக்கிறார்கள். **சகோ.மோகன் சி.லாசரஸ்போல, மறைந்த சகோ.தினகரன்போல** இப்படிப்பட்ட கேள்விகளுக்கு **பதில் கடிதம் எழுதமாட்டார்கள்.** அதே வரிசையில் **சகோ.அகஸ்டின் ஜெபகுமார்** அவர்களும் இணைந்து யாருக்கும் பதில் எழுதாது வேதனையை தருகிறது.

இந்த கட்டுரையை ஜாமக்காரன் மூலமாக வாசித்த பிறகாவது **சகோ.அகஸ்டின்ஜெபகுமார்** தன் பத்திரிக்கையில் இதற்கான பதில் எழுத சொல்லி அவரை நேசிக்கிறவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டுகிறேன். எழுத தயங்கினால் இனியாவது சகோ.**அகஸ்டின் ஜெபகுமார்** அவர்கள் எந்த **தீர்க்கதரிசனமும் கூறாமல் அந்நியபாஷை** என்ற பெயரில் உளரலை பொதுமேடையில் பேசாது **சுத்த சுவிசேஷமும், வழக்கமாக மேடையில்** இவர் பேசும் முறையில் **போலி கிறிஸ்தவர்களை, போலி பாஸ்டர்களை, போலி ஊழியர்களை** எச்சரிக்கை செய்து அதிகாரத்துடன் பேசும் அந்த அதிகார சத்தத்தை அவர் வாயிலிருந்து வெளிவர கர்த்தர் அருள்புரிவாராக.

**சகோ.அகஸ்டின் ஜெபகுமார்** அவர்களையும், அவர் செய்யும் மிஷனரி ஊழியங்களையும் தாங்கி நேசிக்கும் அவர் ஊழிய பங்காளர்கள் யாவருக்கும் இப்போது **என்மேல் வெறுப்பும், கோபமும் தோன்றும்.** பொருத்துக்கொள்ளுங்கள். ஒரு நல்ல சுவிசேஷகர் ஜெபத்தில் பெயர் அழைக்கும் ஊழியங்களின் வழியை **இனி பின்பற்றாதபடி ஊழியம் தொடரவும்** அவர் பீகாரிலும் மற்ற இடங்களிலும் செய்யும் அந்த நல்ல அற்புதமான ஊழியங்கள் தொடரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் இதை எழுதுகிறேன்.

நான் எழுதியதற்கு ஆதாரம் வேண்டுமானால் உங்கள் கம்பியூட்டர் அல்லது வாட்ஸ்ஆப்பில் You Tubeல் கள்ள தீர்க்கதரிசிகள் என்ற தலைப்பில் **சகோ.அகஸ்டின் ஜெபகுமார்** என்று பெயர் எழுதி பாருங்கள். அதில் இவருடன் மற்ற ஊழியர்களின் பொய் தீர்க்கதரிசன விவரங்களையும் காணலாம்.

# CSI TUTICORIN- NAZARETH DIOCESE - MUKUPERI St.MARK CSI CHURCH CONVENTION







என் ஊழியத்தை மிகவும் அதிகமாக தாங்குகிறவர்களும் என்னை நேசிக்கிறவர்களும் தூத்துக்குடி மாவட்டத்தில் **மூக்குபிறி,நாசரேத்,ஒய்யானகுடி,பிரகாசபுரம்,திருமறையூர்** பகுதி கிறிஸ்தவ வாசகர் பல ஆண்டுகளாக என் ஊழியத்தை தாங்குகிறவர்கள்.

ஆகவே பல வருடங்களாக தொடர்ந்து கன்வென்ஷனுக்காக தேதிகளை கொடுத்து வருகிற இம்முறையும் கர்த்தர் அங்கு நடந்த கூட்டங்களில் வசனத்தில் தெளிவுண்டாக வேத ஆராய்ச்சி கன்வென்ஷனாக நடத்தினேன். சபையின் ஆயர். **Rev.Dr.Temple S.Raja** அவர்கள் சபை கன்வென்ஷன் பொருப்பாளர்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்து கூட்டத்தை ஆசீர்வாதமாக நடக்க உதவினார். ஒய்யான்குடி ஆயர் Rev.Asir Joseph அவர்களும், பிரகாசபுரம் CSI ஆயர், Rev.Albert Jeyasingh Thomas அவர்களும் கூட்டத்தில் தலைமை தாங்கி சிறப்பித்தார்கள். இந்த கூட்டங்கள் யாவும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

# TIRUNELVELI DIOCESE (TDTA)
## வடக்கு வாகைக்குளம் பிரதிஷ்டை கன்வென்ஷன் 2018







**வடக்கு வாகைக்குளம்** TDTA சர்ச் கன்வென்ஷன் மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. சபையின் ஆயர். **Rev.P.Samuel** அவர்கள் சேகர தலைவர் அவர்கள் நல்ல ஜெப ஆயத்தத்துடன் இக்கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்ததால் கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக நடந்து முடிந்தது. மக்கள் திரளாக கூட்டங்களில் கலந்துக்கொண்டு ஆசீர்வாதம் பெற்றனர். கடைசி நாள் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்பட்டது. கர்த்தர் ஜெபத்தை கேட்டு கிருபை செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

## E-mail

ஜாமக்காரன் மாதம் வரவில்லை என்று சிலர் எழுதியிருக்கிறார்கள். நீங்கள் எழுதும் இ-மெயில் அல்லது கடிதத்தில் உங்கள் **பழைய விலாசத்தையும்** உங்களுக்கு **கொடுக்கப்பட்ட நம்பரையும், தொலைபேசி எண்ணையும்** எழுதினால் உங்கள் விலாசத்தை லட்சக்கணக்கான விலாச பட்டியலில் தேடும் நிலை ஏற்படாது. ஆகவே இனி எழுதுபவர்கள் எத்தனை முறை எனக்கு பழக்கமானவர்களாக இருந்தாலும் உங்கள் முழுவிலாசத்தையும் மனதில் வைத்துக் கொள்ளமுடியாது. ஆகவே உங்கள் பழைய விலாசத்தையும்,புது விலாசத்தையும் தெளிவாக குறிப்பிடுங்கள். இந்த விஷயத்தில் உங்கள்ஒத்துழைப்பை நாடுகிறேன். புது விலாசம் எழுதி அறிவித்தால் e-mailக்கு அல்லது உங்கள் கடிதத்துக்கும் உடனே பதிலும் கிடைக்கும். ஜாமகாரனும் தாமதிக்காமல் உங்கள் **புது விலாசத்தில்** அனுப்பிவைக்கப்படும். காணிக்கை விவரத்தை எழுதி அறிவிக்கிறவர்கள் உங்கள் **தொலைபேசி எண்ணையும்** மறக்காமல் குறிப்பிடுங்கள். **காணிக்கை கிடைத்த விவரத்தை உங்களுக்கு தொலைப்பேசியில்** உடனே அறிவிப்பேன். ஜெபிப்போம்.

# TIRUNELVELI DIOCESE (TDTA)
# அனைத்து சபைகளின் கூட்டு பெருவிழா 2018






25 வருடங்களுக்கு பிறகு **திருநெல்வேலி திருமண்டலத்தில்** உள்ள அனைத்து சபைகளும் இணைந்து நடத்தும் இக்கூட்டங்கள் திருநெல்வேலி சாராள்டக்கர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் வைத்து நடத்தப்பட்டது.

டையோசிஸ் சபைகளில் அனைத்து சபைகளின் பெரும்பாலான ஆயர்களும் அனைத்து சபைகளின் சபைமக்களும் இக்கூட்டங்களில் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். திருநெல்வேலி TDTA டையோசிஸ்ஸை பொருப்பெடுத்தும் தலைவர்(பொறுப்பு) ஆயர். **Rev.AHL பில்லி,**லே செயலர் திரு.டி.**வேதநாயகம்** (Clargey secretary),Rev.Dr.T.**ஸ்டீபன் செல்வின்ராஜ்**(கன்வீனர்) டையோசிஸ் பொருளாளர் திரு.**தேவதாஸ் ஞானராஜ்** அவர்கள் இக்கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்கள்.

கடந்தகால திருமண்டலத்தின் அநேக பிரச்சனைகளளை மற்நது இக்கூட்டங்களில் திருமண்டல அனைத்து பெரும்பாலான சபைகள் கலந்துக்கொண்டது ஒரு பெரும் ஆறுதலை கொடுத்தது.

ஜாமக்காரன் மூலம் பிரச்சனைக்காரன் என்று கருதிய டாக்டர்.புஷ்பராஜ் ஆகிய என்னை பிரதான பிரசங்கியாக அழைத்து மரியாதை செய்து சிறப்பித்தது. கர்த்தரின் செயலே என்று நினைத்து தேவனை துதிக்கிறேன்.

முழு திருமண்டலத்துக்கும் ஒரு பெரும் ஆவிக்குரிய மாற்றமும் ஒற்றுமையும் உண்டாகாதா என்ற நம்பிக்கையில் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்க கர்த்தர் கொடுத்த வாய்ப்புக்காக தேவனை துதிக்கிறேன்.

## உலக இரட்சகரின் கட்டளையும்,பாரமும்:

இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு, அவைகளையும் நான் கொண்டு வரவேண்டும். அவைகள் என் சத்தத்துக்குச் செவி கொடுக்கும் அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். யோ 10:16.

## உலக முடிவு எப்போது?:

இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் முந்தி பிரசங்கீக்கப்படவேண்டும்(அதன் பிறகுதான் உலகத்துக்கு முடிவு உண்டாகும்). மாற் 13:10.

நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா,குமாரன்,பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள். மத் 28:19.

மேலே வாசித்தது வானத்தையும்,பூமியையும் மனுஷர்களையும் உண்டாக்கின சர்வசக்தியுள்ள தேவனின் கட்டளைகளாகும். இதை எந்த தேசமும் எந்த அதிகாரமும் தடைசெய்யமுடியாது. தடைசெய்யக்கூடாது. இந்த கட்டளைக்கு இயேசுவின் இரத்ததால் கழுவப்பட்ட எல்லா கிறிஸ்தவர்களும் கீழ்ப்படியவேண்டும்.

**JUNE 2018**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.